பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 27 வெள்ளிக்கிழமை 12.03.2021 கதிர் 127

### இனிது ரகசியம் அல்ல!

இலங்கைத் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்துடன் மிக நெருங்கிச் செயற்பட்ட சட்டவறிஞர் அவர். அனேகமாக அனைத்து இயக்கங்களின் தலைவர்களுக்கும் பரிச்சயமானவர் அவர்கள் எல்லோராலும் பெரிதும் மதிக்கப்பட்டவர். தற்போது பக்கம்02 »

# தமிழர் தேசத்துக்குப் பெரும் ஏமாற்றம்; ஐ.நாவின் வரைவை நிராகரிக்கிறோம்!

## நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் அறிக்கை

இலங்கைக்கு மேலும் ஒரு கால நீடிப்பை வழங்கி, பொறுப்புக்கூறலை நீர்த்துப் போகச் செய்கின்ற வகையில், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் சமர்பிக்கப்பட்டுள்ள தீர்மான வரைவை முற்றாக நிராகரிக்கின்றோம். நீதிக்காகப் போராடும் தமிழர் தேசத்துக்கு இது பெருத்த ஏமாற்றத்தைத் தருவதாக அமைகின்றது.

– இவ்வாறு நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தீர்மானம் என அமைந்த முதல் வரைவு தமிழர்களுக்குப் பெருத்த ஏமாற்றத்தை தருவாக அமைந்திருந்த நிலையில், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்குப் பாரப்படுத்த வேண்டும் என அவர்கள் கோரியிருந்தனர்.

நேற்று வாக்கெடுப்பு நோக்கிய தமது தீர்மான வரைவை பிரிட்டன் தலைமையிலான கூட்டு நாடுகள் சமர்ப்பித்திருந்தன. எதிர்வரும் 22, 23ஆம் திகதிகளில் வாக்கெடுப்புக்கு வரலாம் எனக் கூறப்படுகின்றது. ☞2

## குற்றவாளிகளைப் பாதுகாத்தால்

# சர்வதேச நீதிமன்றமே எங்களுக்கு ஒரே வழி!

### கோட்டாபய அரசுக்கு பேராயர் மீண்டும் எச்சரிக்கை



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் நீதியைப் பெற்றுத் தருவோம் என்று நாட்டு மக்களுக்கு அரசு உறுதியளித்திருந்தது. எனவே, அரசியல் நலன் கருதி குற்றவாளிகளைப் பாதுகாக்கும் விதத்தில் அரசு செயற்படக்கூடாது.

– இவ்வாறு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார். ☞2

### மேலும் 5 பேர் மரணம்; கொரோனாச் சாவு 520

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 520 ஆக அதிகரித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாவலப்பிட்டியைச் ☞2

### பயிற்சிப் பட்டறையில் பங்கேற்ற இருவருக்கு கொரோனாத் தொற்று

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் மேலும் 2 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்று கண்டறியப்பட்டுள்ளது.

அவர்களில் ஒருவர் கிளிநொச்சியையும், மற்றையவர் பதுளையும் சேர்ந்தவர் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் ☞2

### ராஜபக்ஷ அரசுடன் இணைந்து மேயர் பதவி பெற்றவரே மணி

#### முன்னணி பதிலடி



(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

ராஜபக்ஷ அரசின் நிகழ்ச்சி நிரலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி செயற்படுகின்றது என யாழ். ☞2

### வவுனியா ஆடைத்தொழிற்சாலையில் மேலும் 7 பேருக்குக் கொரோனா உறுதி

(வவுனியா நிருபர்)

வவுனியா, கண்டிவீதியிலுள்ள பிரபல ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றுபவர்கள் 7 பேர் உட்பட 8 பேருக்கு நேற்றிரவு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த ☞2

### ஹெரோயின் வைத்திருந்த ஒருவர் யாழ். நகரில் கைது!



(எஸ்.நிதர்ஷன்)

உயிர்க்கொல்லி போதைப்பொருளான ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் நகரில் வைத்து அவர் ☞2

A/L 2023
கலை, வர்த்தகம்
கணிதம், உயிரியல்
NEC
இன்று காலை 9.00 மணி முதல் ஆரம்பம்
குறிப்பு:- 2023 இல் புதிதாக இணையவுள்ள மாணவர்கள் தமது பாடத் தெரிவினை மேற்கொள்ளுவதற்கும் மாணவர் முன்னேற்றத்தை சிறப்பாக வழி நடத்தவும் கலை, வர்த்தகம், கணிதம், உயிரியல் பாடங்களின் புலமை வாய்ந்த ஆசிரியர்களினால் மார்ச் மாத கட்டணமின்றி விசேட வழிகாட்டல் சேவை. வழங்கப்படுகின்றது.
A/L 2021, 2022, Day Class
வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.
மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம்.
076 166 1986

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளிநாடு ஒன்றில் வசிக்கின்றார். இலங்கைத் தமிழர்களின் அரசியல் செல்நெறி பற்றிய அவரது பார்வை, கருத்தோட்டம், பிரதிபலிப்பு என்பன எல்லோராலும் அதிகம் கவனிக்கப்படுபவை.

நேற்றுமுன்தினம், நாடாளுமன்றத்தில் நடைபெற்ற – ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் விசாரணை அறிக்கை மீதான – விவாதத்தின் போது கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆற்றிய உரை அதிக ஆழமான கருத்தாடல்கள் பொதிந்ததாக எனக்குத் தோன்றியமையால் அதன் காணொலி இணைப்பை அவருக்கு அனுப்பி வைத்திருந்தேன். தவறிழைத்தவர்களையும் மன்னிக்கும் கிறிஸ்தவத்தின் மாண்பு, அதேசமயம் நீதி நிலைநிறுத்தப்படுவதன் அவசியம் ஆகியன பற்றி எல்லாம் சுமந்திரன் நல்ல சொல்லாடல்களுடன் அந்த உரையை ஆற்றியிருந்தார்.

அவர் அனுப்பிய பதில் குறிப்பின் தமிழாக்கம் – சாரம்சம் – பின்வருமாறு இருந்தது:–

*“பேச்சைக் கேட்டேன். அந்தப் பேச்சின் சாராம்சம் உங்களின் இன்றைய (நேற்றைய) ஆசிரிய தலையங்கத்தில் பிரதிபலிக்கப்பட்டிருந்தது.*

*“காலையில் கூறியபடி, இலங்கை தோற்றுப்போன நாடு என்பது உண்மைதான். முஸ்லிம்கள், கத்தோலிக்கர்கள், கிறிஸ்தவர்களின் அதிருப்தி மென்மேலும் அதிகரிப்பது அதனை உறுதிப்படுத்துகின்றது.*

*“நான் அடிக்கடி குறிப்படுவது போல நீதி தமிழர்களின் பக்கத்தில்தான். ஆனால் அது வழங்கப்படுவதற்காக நீண்ட காலமாக (பாதையில்) அவர்கள் காத்திருக்கின்றனர். செல்வநாயகம், ஜி.ஜி, அமிர் போன்றவர்கள் எல்லோரும் கூட இது போன்று பல தடவைகள் அவைக்குள் (நாடாளுமன்றுக்குள்) தெளிவாகக் கூறியிருக்கின்றார்கள். பிரபாகரன் கூட ஒவ்வொரு வருடமும் மாவீரர் தின உரையில் இதனைக் கூறியே வந்துள்ளார்.*

*“இந்தக் குறிப்பிட்ட சமயத்தில் இதைக் கூறுவது (சுமந்திரன் உரையாற்றியமை) நல்லதுதான். ஆனால் மீண்டும் இது செவிடன் காதில் ஊதிய சங்குதான். அது அவர்கள் காதில் வீழப் போவதில்லை.*

*“ஆகவே எங்கள் நடவடிக்கைகள் பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான பேரெழுச்சி ஊர்வலம் போன்ற செயற்திறன் வெளிப்படுத்துவனவாக இருக்க வேண்டும். அதுதான் பயன்தரும்”* – என்று குறிப்பிட்டிருந்தார் அந்த மூதறிஞர்.

சரியான கருத்துத்தான். விடுதலைப் புலிகளின் துப்பாக்கிகள் சன்னங்களை உமிழ்ந்த போது – எறிகணைகள் கனன்ற போது – பீரங்கிகள் முழங்கிய போது – அந்த யுத்தச் சத்தத்தின் மத்தியில் தமிழர்களின் உரிமைக் குரலும் நீதி வேண்டிய கோரிக்கையும் சர்வதேசத்தின் காதில் சத்தமாக வீழ்ந்தது. தமிழர்களுக்கு நீதி வழங்குவது மட்டுமல்ல, உரிய உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதும் உலகின் கடமை என்ற மாதிரி சர்வதேச சமூகம் செயற்பட்டது. ஆனால் சுடுகலன்களின் சந்நதம் – சத்தம் – அடங்கிய போது – போர் முழக்கம் ஸ்தம்பித்த போது – சர்வதேசத்தின் கவனிப்பும் அகன்றது. தமிழர்களின் நீதிக்கான அவலக்குரல் – அபயக்குரல் – சர்வதேசத்தின் காதுகளில் இப்போது வீழ்வதாகவோ, அதனை உசுப்பேத்துவதாகவோ அமையவில்லை.

அந்தத் தமிழ் அறிஞர் சுட்டிக்காட்டுவது போல வெறுமனே நாடாளுமன்றப் பேச்சுக்களினால் நாம் எதையும் சாதித்துவிட முடியாது. அதிர்வுள்ள – உலகைத் திரும்பி நம்மைப் பார்க்க வைக்கின்ற – போராட்டங்கள் அவசியம். அதற்கு ஆயுத முறையோ, வன்முறையோதான் வழி என்றல்ல. அஹிம்சை வழியிலும், காந்தீய மார்க்கத்திலும், அறநெறியிலும் கூட அதனைச் செய்ய முடியும். சுயநலம் துறந்து, தன்னை ஒறுத்துப் போராடும் திடசங்கற்பமும் பற்றுறுதியும் உள்ள தலைவர்கள், தலைமைகள் நமக்குத் தேவை.

தமிழர்களின் முக்கிய கட்சிகளுக்குள் அத்தகைய செயல்வீரர்களை ‘அண்டவிடாமல்’ நமது தலைவர்கள் பார்த்திருக்கும் வரை –

பதவிக் கதிரைகளை மாத்திரம் இலக்கு வைத்து, தாமும், தமது சந்ததியும், தம்மைச் சூழ்ந்தோரும் பதவிகளை எட்டினால் போதும் என்ற குறுகிய சிந்தனையுள்ளவர்களின் கைகளில் நமது கட்சிகளின் தலைமையும் வழிகாட்டு அதிகாரமும் கிக்குண்டு கிடக்கும் வரை –

அதிர்வுள்ள போராட்டங்களை முன்னெடுப்பதோ, உலகத்தைத் திரும்பிப் பார்க்க வைப்பதோ, அந்தத் தமிழ் அறிஞரின் எதிர்பார்ப்பு நிறைவேறுவதோ சாத்தியமேயற்ற பகல் கனவுதான். இதுதான் நிஜம்!

– மின்னல் –

## வவுனியா ஆடைத்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றும் சிலர் கடந்த சில நாட்களாகக் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டதையடுத்து அவர்களுடன் தொடர்புடையவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் முடிவுகள் சில நேற்றிரவு வெளியாகிய நிலையில் 7 பேருக்குக் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், வவுனியா புதிய பஸ் நிலையத்தில் உள்ள உணவகம் ஒன்றில் பணியாற்றுபவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன்படி வவுனியாவில் நேற்று 8 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வவுனியா, கண்டி வீதியிலுள்ள ஆடைத்தொழிற்சாலையயைச் சேர்ந்த 14 பேர் இதுவரை கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (100)

## பயிற்சிப் பட்டறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்ததாவது:–

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடத்தில் 319 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். தொண்டு நிறுவனம் ஒன்று நடத்திய பயிற்சிப் பட்டறையில் பங்கேற்ற 29 பேரிடம் பரிசோதனை பெறப்பட்டது.

அவர்களில் ஒருவர் கிளிநொச்சியையும் மற்றையவர் பதுளையையும் சேர்ந்தவர்கள்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 371 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் எவருக்கும் தொற்று இல்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது – என்றார்.

## தமிழர் தேசத்துக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

இலங்கைக்கு மேலும் ஓர் கால நீடிப்பை வழங்குவதாகவே தீர்மான வரைவு அமைந்துள்ளது. அத்துடன் பொறுப்புக்கூறலை நீர்த்துப்போகச் செய்வதாகவும் அமைகின்றது. இதனை முற்றாக நிராகரிக்கின்றோம். நீதிக்காக ஏங்கும் தமிழர் தேசத்துக்கும், பாதிக்கப்பட்ட மக்களுக்கும் பெருத்த ஏமாற்றத்தையும் இது தருகின்றது.

அரசுகள் தாம் ஒரு தரப்பாக எடுகின்ற முடிவுகள் தொடர்பில், அரசற்ற இனங்கள் சந்திக்ககூடிய, எதிர்கொள்ளக்கூடிய சவால்களை இது வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது. புவிசார் அரசியல் வெளியில் நம்மை ஒரு தரப்பாக மாற்ற வேண்டிய மூலோபாயங்களை வகுத்துக் கொள்ள வேண்டிய அவசியத்தையும் இது உணர்த்துகின்றது.

எமக்கான நீதியை வென்றெடுப்பதற்கு ஜெனிவாவுக்கு அப்பாலும், புதிய புதிய களங்களை நோக்கி நாம் செயற்பட வேண்டியவர்களாக இருக்கின்றோம். அத்துடன் ஐ.நாவில் வாக்கெடுப்புக்கு முன்னராக தீர்மான வரைவில் திருத்தங்களை கொண்டு வரக்கூடிய தீவிரமான செயல்முனைப்பிலும் ஈடுபடவுள்ளோம் – என்றுள்ளது.

# வடமராட்சியில் அதிபரின் வீட்டில் கத்திமுனையில் தாலி அபகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 12

வடமராட்சி, பருத்தித்துறை, புற்றளைப் பகுதியில் வீடொன்றில் நுழைந்த திருடர்கள் கத்திமுனையில் பெண்ணின் கழுத்தில் இருந்த தாலியை அபகரித்துச் சென்றுள்ளனர்.

மகா சிவராத்திரியையொட்டி வீட்டில் குடும்பஸ்தர் கோயிலுக்குச் சென்ற நிலையில் நேற்று மாலை 6:45 மணியளவில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

புற்றளையில் வசிக்கும் வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலய அதிபரின் வீட்டிலேயே இந்தக் கொள்ளைச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

முகத்தை மறைத்து முகமூடி அணிந்து கத்தியோடு உள்நுழைந்த இருவரைக் கண்டதும், வீட்டில் இருந்த அதிபரின் மனைவி, இரு மகள்மார் ஆகியோர் கூச்சலிட்டதைத் தொடர்ந்து, அதிபரின் மனைவியின் கழுத்தில் இருந்த தாலியை அபகரித்துக்கொண்டு கொள்ளையர்கள் தப்பியோடியுள்ளனர்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பருத்தித்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சர்வதேச நீதிமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்தமாட்டோம் என்று அரசு அறிவித்திருந்தது. இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

குறைபாடுகள் நிறைந்திருக்கும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கையை வைத்து அரசு காலத்தை இழுத்தடிக்குமானால் நாம் சர்வதேச நீதிமன்றத்தின் உதவியை நாட நேரிடும் என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன்.

ஈஸ்டர் தாக்குதலை நடத்தியவர்கள், அதற்கு நிதியுதவி வழங்கியவர்கள், தாக்குதலுக்கு நேரடியாக – மறைமுகமாக ஒத்துழைப்பு வழங்கியவர்கள் போன்றோர் தொடர்பில் விரிவான விசாரணைகளை அரசு நடத்த வேண்டும்.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கையை வைத்துக்கொண்டும் – அதை ஆராய இன்னொரு ஆணைக் குழுவை நியமித்தும் காலத்தை வீணடிக்கும் செயலில் அரசு ஈடுபடக்கூடாது.

ஈஸ்டர் தாக்குதல் குற்றவாளிகளைத் தண்டிப்போம் எனவும், நீதியைப் பெற்றுத் தருவோம் எனவும் நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கியே புதிய அரசு ஆட்சிக்கு வந்தது. எனவே, குற்றவாளிகளைத் தண்டிப்பதும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை வழங்குவதும் அரசின் பிரதான கடமையாகும் – என்றார்.

## ஹெரோயின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று கைது செய்யப்பட்டார் என்று மாவட்ட போதைப்பொருள் ஒழிப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

நெல்லியடியைச் சேர்ந்த 34 வயதுடைய சந்தேகநபரிடமிருந்து சுமார் 4 இலட்சம் ரூபா பெறுமதியான 25 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது எனப் பொலிஸார் கூறினர்

உப பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான யாழ்ப்பாணம் மாவட்ட போதைப்பொருள் ஒழிப்புப் பொலிஸ் பிரிவினரே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

சந்தேகநபர் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். அவர் இன்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார்.

## மேலும் 5 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேர்ந்த 56 வயதுடைய பெண்ணொருவரும், அங்குலானப் பகுதியைச் சேர்ந்த 63 வயதான பெண்ணொருவரும், மத்தேகொட பகுதியைச் சேர்ந்த 80 வயதான பெண்ணொருவரும், பிபில பகுதியைச் சேர்ந்த 67 வயதுடைய ஆணொருவரும், தெஹிவளைப் பகுதியைச் சேர்ந்த 68 வயதான ஆணொருவருமே இறுதியாக கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

## ராஜபக்ஷ அரசுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாநகர மேயர் வி.மணிவண்ணனின் குற்றச்சாட்டை நிராகரித்துள்ள முன்னணியின் சட்டத்தரணி க.சுகாஷ், ராஜபக்ஷ அரசுடன் இணைந்து மேயர் பதவி பெற்றவரே மணிவண்ணன் என்றும் சாடியுள்ளார்.

கடந்த 7ஆம் திகதி இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அரசின் நிகழ்ச்சி நிரலில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி செயற்பட்டு வருகின்றது என யாழ். மாநகர சபை மேயர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் யாழ்ப்பாணத்திலுள்ள தமது கட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது க.சுகாஸ் பதில் வழங்கியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ராஜபக்ஷ அரசின் வலதும் மற்றும் ஈ.பி.டி.பியின் ’பி’ அணியுமாக மணிவண்ணன் தரப்பே செயற்படுகின்றது. அதனால்தான் அரசியல் கோமாளித்தனமாக எங்கள் கட்சி மீது வேண்டுமென்றே குற்றச்சாட்டுகளை மணிவண்ணன் தரப்பினர் சுமத்தி வருகின்றனர்.

அன்று ஒரு கதையும் இன்று வேறொரு கதையையும் கூறி பதவிக்காக மணிவண்ணன் தரப்பு உளறி வருகின்றது.

இவர்கள் பற்றி எங்களாலும் நிறையக் கதைக்க முடியும். ஆகவே, இவ்வாறு உளறுவதை அவர்கள் நிறுத்திக்கொள்வது முதலில் நல்லது.

நாங்கள் ராஜபக்ஷ தரப்புக்கு ஆதரவை வழங்கவில்லை என்பதுடன் அவர்களின் நிகழ்ச்சி நிரலிலும் செயற்படவில்லை. ஆனால், ராஜபக்ச தரப்பின் ஆதரவுடன் மாநகர மேயரானது மணிவண்ணன்தான்.

அதனால்தான் ராஜபக்ஷ தரப்பின் வலதும் இடதுமாக அவர் இருக்கின்றார். அதே நேரத்தில் ஈ.பி.டி.பியின் ‘பி’ அணியாகவும் மணிவண்ணண் தரப்பே செயற்படுகின்றது.

இவ்வாறு அரசுடன் இணைந்து பதவியைப் பெற்றுவிட்டு மற்றவர்களைக் குற்றஞ்சாட்டுவது வேடிக்கையானது.

இனத்தின் விடுதலைக்காக நேர்மையாக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற எங்கள் அமைப்பைக் குற்றஞ்சாட்டுவதற்கு அவர்களுக்கு எந்தத் தகுதியும் இல்லை – என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு - மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -076 443 8622
காலைக்கதிர்

# தேசிய பாதுகாப்புக்காக புர்காவுக்கு உடனடி தடை!

## பொதுமக்கள் அமைச்சர் சுட்டிக்காட்டு



இஸ்லாமிய அடிப்படைவாத கொள்கையில் இயங்கும் பதினொரு அமைப்புகள் அரசாங்கத்தால் அடையாளம் காணப்பட்டுள்ளன எனவும், அவற்றை தடைசெய்வதுடன் அந்த அமைப்புகளின் தலைவர்களைக் கைது செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர சபையில் தெரிவித்தார்.

நாட்டின் தேசிய பாதுகாப்பை கருத்தைக் கொண்டு புர்காவை உடனடியாக தடை செய்யவும், இஸ்லாமிய பாடப்புத்தகங்களில் உள்வாங்கப்பட்டுள்ள வஹாபி, சலபி கொள்கைகளை நீக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அமைச்சர் சபையில் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் தீர்மானத்தை சபையில் முன்வைத்து கருத்துக்களை கூறிய போதே அமைச்சர் சரத் வீரசேகர இதனை கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

இலங்கையில் அதிகளவிலான மதரஸா பாடசாலைகள் முறையாக செயற்படவில்லை என்பது தற்போது கண்டறியப்பட்டுள்ளது. எனவே இலங்கையில் பிறக்கும் சகல குழந்தைகளுக்கும் 5 வயது தொடக்கம் 16 வயது வரையில் அரச கல்வியைத் தொடர்வது கண்டிப்பானது எனவும் அரச கொள்கைக்கு அமைய கல்வியை பெற்றுக்கொடுக்க வேண்டும் எனவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதனை நிராகரிக்கும் சகல பாடசாலைகளையும் தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல் நீண்ட காலமாக முறையான கல்வியை பெற்றுக்கொடுக்கும் மதரஸாக்களும் இயங்குகின்றன என்பதையும் நாம் நினைவுபடுத்துகின்றோம்.

அத்துடன் பாடசாலைப் பாடப்புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள அடிப்படைவாத கருத்துக்களை நீக்கவும் இப்போதே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக முதலாம் தரம் தொடக்கம் 13 ஆம் தரம் வரையிலான பாடப்புத்தகங்களில் ஏனைய மதத்தவருக்கு எதிராக செயற்பட வேண்டும் என கூறப்பட்டுள்ளதுடன், வஹாபி, சலபி கொள்கைகள் சூட்சமமாக பாடப்புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது. இவற்றை பாடப்புத்தகங்களில் இருந்து நீக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

மேலும் இந்த தாக்குதலுக்கு ஏற்ற சூழலை நேரடியாகும் மறைமுகமாகவும் உருவாக்கிக்கொடுத்த 11 இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புகள் அரசாங்கத்தினால் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றை விரைவாக தடைசெய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். மேலும், சஹ்ரானின் அமைப்பு உட்பட இலங்கையில் செயற்படும் அடிப்படைவாத இஸ்லாமிய அமைப்புகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், இந்த அமைப்புகளின் தலைவர்களை கைது செய்யவும் இந்த அமைப்புகளை தடைசெய்ய பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். குறிப்பாக 'வன் உம்மா, ஹிசபுத் தாஹிர், முஜஹர்தீன் அல்லாஹ்,சுபர் முஸ்லிம்' ஆகிய அமைப்புகளை நாம் அடையாளம் கண்டுள்ளோம்.

அத்துடன் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான விடயங்கள் என்ற சிலவற்றை அடையாளம் கண்டுள்ளதுடன் அவற்றில் பிரதானமாக புர்காவை உடனடியாக தடைசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல் சிறுவர் மற்றும் பெண்களை கருத்தில் கொண்டு சிறுவர் திருமண சட்டத்தையும் மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். அதுமட்டுமல்லாது இந்த தாக்குதலுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புபட்ட சகல நபர்களுக்கும் உயரிய தண்டனையை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த தாக்குதலுடன் தொடர்புபட்ட முக்கிய தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. எனவே விரைவாக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். நாம் இஸ்லாமிய மதத்தை கட்டுப்படுத்தவில்லை. அதில் வளரும் அடிப்படைவாதத்தையே நாம் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கின்றோம். குறிப்பாக வஹாபி கொள்கையை தடுக்கவே நாம் நடவடிக்கை எடுக்கின்றோம். இந்த செயற்பாடுகளில் முஸ்லிம் மக்க ளின் ஒத்துழைப்பும் எமக்கு கிடைக்கின்றது. அதேபோல் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை முன் னெடுத்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிசீலனைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

# வரலாற்றுச் சிறப்புமிக்க நகுலேச்சரம் தேர்த் திருவிழா!





யாழ்ப்பாணம், மார்ச் 12

வரலாற்றுச் சிறப்புமிக்க அருள்மிகு நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வர சுவாமி கோயிலின் தேர்த் திருவிழா நேற்று சிறப்புற நடைபெற்றது.

அபிஷேக ஆராதனைகளுடன் நேற்று (வியாழக்கிழமை) காலை வசந்த மண்டபப் பூசைகள் நடைபெற்று விநாயகர், முருகப்பெருமான் – வள்ளி தெய்வானை சமேதரராக எழுந்தருள, நகுலேஸ்வரப் பெருமான் எழுந்தருளி உள்வீதியில் வலம்வந்தார்.

மங்கள வாத்தியங்கள் முழங்க பிராமணர்களின் மந்திர உஷ்டானங்கள் ஒலிக்க முதல் தேரிலே விநாயகப் பெருமானும் இரண்டாவது தேரிலே நகுலேஸ்வரப் பெருமான் சமேத நகுலாம்பிகையும், மூன்றாவது தேரிலே முருகப்பெருமான் – வள்ளி தெய்வானையுடன் இணைந்து தேரேறி வெளி வீதியுலா வந்தனர்.

பக்தர்கள் தேரின் பின்னே பஜனை பாடி மங்கள வாத்தியங்கள் முழங்க தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெற்றது.

கடந்த மாதம் 26ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய மகோற்சவத்தில், நேற்றுமுன்தினம் திருவிழாவாக சப்பறதத் திருவிழாவும் 14 ஆவது நாளான சிவராத்திரி தினமாகிய நேற்று காலை தேர்த் திருவிழாவும் நடைபெற்றது.

இதனைத தொடர்ந்து நேற்று இரவு சிவராத்திரி விசேட பூசைகள் நடைபெற்று 15ஆம் நாளாகிய இன்றைய தினம் கீரிமலை புனித கண்டகி தீர்த்தத்தில் நடைபெறும் தீர்த்தோற்சவத்துடன் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நிறைவடையவுள்ளது.

# தோட்டத் தொழிலாளரின் உரிமைக் குரலை இராணுவத்தைக் கொண்டு நசுக்க முயற்சி!

## சபையில் இராதாகிருஷ்ணன் காட்டம்



தோட்டத் தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா சம்பள பிரச்சினையை திசை திருப்ப தொழிலாளர்களை பயங்கரவாதிகள் என சித்திரித்து இராணுவத்தை கொண்டு தொழிலாளர்களை அடக்கி அச்சுறுத்த அரசாங்கமும் பெருந்தோட்ட நிறுவனங்களும் முயற்சிக்கின்றன என எதிர்க்கட்சி உறுப்பினர் வி.இராதாகிருஷ்ணன் சபையில் குற்றம் சுமத்தினார்.

இராணுவத்தைக் கொண்டு வடக்கு, கிழக்கு மக்களை அடக்குமுறைக்குள் உட்படுத்திய யுத்தமொன்றுக்கு வழிவகுத்தமையைப் போலவே மலையகத்திலும் குழப்பங்களை ஏற்படுத்த அரசாங்கத்தின் அனுமதியுடன் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றனவா எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் தொடர்பான ஒத்திவைக்கப்பட்ட விவாதத்தின் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

மலையகத்தில் பல்வேறு பிரச்சினைகள் உருவாகி வருகின்றன. குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தின் அம்பகமுவ பகுதியில் ஹோல்டன் தோட்டத்தில் தொடர்ச்சியாக 32 ஆவது நாளாகவும் வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது

தொழிலாளர்களுக்கும் தோட்ட நிர்வாகத்துக்கும் இடையில் ஏற்பட்ட பிரச்சினையின் காரணமாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. இதில் எட்டு பெண் தொழிலாளர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்பதை சபையில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

நிர்வாக அதிகாரிகள் தொழிலாளர்களை அடித்ததன் காரணமாகவே இந்த பிரச்சினையின் ஆரம்ப குழப்பநிலை ஏற்பட்டது. அதனை அடுத்து பிரச்சினைகள் வளர்ந்து இன்று வேலைநிறுத்தப் போராட்டம் நீடிக்கின்றது. இதில் கம்பனிகளின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளே காரணமாகும். இந்த பிரச்சினை தொடர்பில் ஹற்றன் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விவாதிக்கப்பட்ட வேளையில் நுவரெலியா பகுதியில் பயங்கரவாதம் தலைதூக்கியுள்ளதாகவும், எல்.ரி.ரி. ஈயின் செயற்பாடுகள் மலையகத்திலும் இருக்கின்றது என்ற விதத்தில் ஜனாதிபதி சட்டத்தரணி ஒருவர் கூறியுள்ளார்.

ஆகவே தொழிலாளர்களை பயங்கரவாதிகளாக சுட்டிக்காட்டி, பயங்கரவாதிகளுக்கு எதிரான போராட்டமே முன்னெடுக்கப்படுவதாக நாடகமொன்றை சித்திரித்து தோட்டக் கம்பனிகள் செயற்படுகின்றன என்பதை அவதானிக்க முடிகின்றது. தோட்ட துரைமார்கள் வரலாற்றில் முதல் தடவையாக தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்துள்ளமையும் இதற்காகவேயாகும். ஆரம்ப காலத்தில் வெள்ளைக்காரர்கள் தொழிலாளர்களை அடக்கி ஆண்டமையைப் போன்று இன்று பெருந்தோட்ட கம்பனிகளும் அரசாங்கமும் தோட்டத் தொழிலாளர்களை அடக்கியாள நினைக்கின்றனரா என்ற சந்தேகம் எழுகின்றது. – என்று கூறினார்.

# தவக்காலச் சிந்தனை



அருட்கலாநிதி டேவிற் வி.பற்றிக். அ.ம.தி

## மன்னித்து மகிழ்வுறுதல்

மன்னித்துவாழல் மகிழ்வான வாழ்வின் மறுபக்கமாகும். நாளாந்தம் மன்னித்து வாழல் பழக்கப்பட்டவர்கள் மகிழ்வுடன் வாழப் பயிற்றுவிக்கப்பட்டவர்களாக விளங்குவார்கள்.

இயேசுவை அணுகி 'ஆண்டவரே,என் சகோதரர் சகோதரிக்குள் ஒருவர் எனக்கு எதிராகப் பாவம் செய்து வந்தால் நான் எத்தனை முறை அவரை மன்னிக்க வேண்டும். ஏழு முறை மட்டுமா?' எனக் கேட்டார். அதற்கு இயேசு அவரிடம் கூறியது. "ஏழு முறை மட்டுமல்ல எழுபது தடவை ஏழுமுறை என நான் உனக்குச் சொல்கிறேன்" (மத்தேயு 18:21)

இரக்கமுடையவர்கள் இலகுவில் மற்றவர்களை மன்னித்து வாழ்வார்கள். குழந்தை உள்ளம் கொண்டவர்கள் குவலயத்தை இறைவன் வாழும் இல்லமாகமாற்றி அமைக்க முனைவார்கள். கல்லையும் உளர வைக்கும் கனிவுடையோரால் அவர்கள் காணப்படுவார்கள். வெளிவேடம் போட்டு நாடகம் ஆடுவதை அவர்கள் தவிர்த்து வாழுவார்கள். நீரோடையோரம் நடப்பட்ட மரம்போல அவர்கள் மிகுந்த கனி தந்து, சீரான மனித வாழ்விற்கு அர்த்தம் காட்டுவார்கள். நோகிதம் 'நோ' சொல்லி பிறரது மனங்களைக் காயப்படுத்தாது பண்புள்ள மனிதரால் அன்போடு வாழ வல்லவர்கள். இருளான உலகில் ஒளிருகின்ற தீபங்களாய் எரிவார்கள்.

உள்ளமாறக் கொள்கை கொண்டு கள்ளமின்றி வாழ்ந்திட முனைந்திடுவோம். மாறும் உலகில் மாறா அன்புடன் வாழ ஆற்றல் பெறுவோம். பிறரைப் புண்படுத்தாது, பண்புடன் வாழப் பயிற்சி எடுப்போம். வசதி குறைந்தோரை பரிச்சிக்காது, வாழ்விழந்தோர் வளமுடன் வாழ வழிகாட்டுவோம்.

காலைக்கதிர் Kalaikkathir

# அம்பாந்தோட்டை விவசாயிகள் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்!




விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டம் காரணமாக சுமார் 3 மணி நேரம் மாத்தறை கொழும்பு பிரதான வீதி முடக்கப்பட்டதுடன் அரசாங்கத்துக்கும் பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

யானைகளை பராமரிப்பதற்காக விவசாயக் காணிகளை அரசாங்கம் கபளீகரம் செய்துள்ளதாக அறிந்த விவசாயத்தில் ஈடுபடும் மக்கள் கடந்த 53 தினங்களாக முன்னெடுத்த உணவு தவிர்ப்புப் போராட்டம் அமைச்சர் சமல் ராஜபக்ஷ வழங்கிய உறுதிமொழியை அடுத்து கைவிடப்பட்டிருந்த நிலையில் கடந்த புதன்கிழமை பூதாகாரமாக வெடித்தது.

அரசாங்கம் தங்களை ஏமாற்றுவதாக குற்றம்சாட்டி மீண்டும் விவசாயச்செய்கையில் பெண்கள் இருவர் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டமையை அடுத்து விவசாயிகள் அம்பலாந்தோட்டை நகரில் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

ஆளுங் கட்சியின் தேர்தல் கோட்டையான அம்பாந்தோட்டை, அம்பலாந்தோட்டை போன்ற இடங்களில் இவர்களுக்காக நேரடியாக சென்று வாக்கு சேகரித்த பிக்குகளும் இணைந்து வீதியை மறித்து பாரிய போராட்டதை முன்னெடுத்தனர்.

யானைக்கும் மனிதனுக்கும் இடையில் முரண்பாட்டை ஏற்படுத்துவதற்காக இந்த அரசாங்கம் முன்னெடுக்கும் இந்தத் திட்டத்தை உடனடியாக நிறுத்தாவிட்டால் அம்பாந்தோட்டை தொடக்கம் கொழும்பு வரை விவசாயிகள் பேரணியாக செல்வதாகவும் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு இடம்பெயர்ந்த இலங்கையர்களை நாட்டுக்கு அழைக்க ஏற்பாடு!

## நாமல் ராஜபக்ஷ நடவடிக்கை



ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு பல்வேறு காரணங்களுக்காக இடம்பெயர்ந்துள்ள இலங்கையர்களை தாயகம் அழைத்து வருவதற்கான உரிய நடவடிக்கைகளை இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ எடுத்துள்ளார்.

ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு தொழில் நிமித்தமாக சென்ற இலங்கையர்கள், பல்வேறு பிரச்சினைகள் காரணமாக தாய் நாட்டுக்கு வருவதற்கு சிரமப்பட்டுவருகின்றனர். இவர்களில் பலர், கொரோனா அச்சுறுத்தல் காரணமாக தொழில்களை இழந்துள்ளதுடன், பல்வேறுபட்ட நோய்த் தாக்கம் உள்ளிட்ட வெவ்வேறு விதமான பிரச்சினைகளால் தாயகம் திரும்ப முடியாதுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய அரபு இராச்சியத்துக்கான விஜயத்தின் ஓர் அங்கமாகவே, அமைச்சர் நாமல் ராஜபக்ஷ இலங்கை தூதரகத்தில் நிர்க்கதியாகியுள்ள இலங்கையர்களை சந்தித்திருந்தார்.

இலங்கை தூதரகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளவர்களில் தாய் நாட்டுக்கு வருவதற்கு எதிர்பார்த்துள்ள இலங்கையர்களுக்கான விமானப் பயணச்சீட்டுக்களை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ வழங்கியிருந்மையுடன், அதற்கான நடவடிக்கைகளை சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஒருங்கிணைப்புக் கூட்டத்துக் அழைப்பில்லை விவசாய சம்மேளனம் அதிருப்தி தெரிவிப்பு!

வவுனியாவில் இடம்பெறும் பிரதேசமட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டங்களில் கலந்துகொள்வதற்கு விவசாய துறைசார்ந்த பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்கப்படுவதில்லை என மாவட்ட விவசாய சம்மேளனத்தின் தலைவர் சேதுகாவலர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அவர் -

'வவுனியாவில் பிரதேசமட்டங்களில் இடம்பெறும் அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் விவசாய பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்கப்படாமையால் அவர்கள் சார்ந்த பல்வேறு பிரச்சினைகளை வெளிப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வவுனியாவை பொறுத்தவரை விவசாய செய்கையைப் பிரதானமாகக் கொண்ட மக்களே அதிகம் வாழ்கின்றார்கள். அதேபோல அந்த துறைசார்ந்த பிரச்சினைகளும் இங்கு ஏராளம் உள்ளன.

குளங்கள் தொடர்பாக பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. எனவே அவற்றை வெளிப்படுத்தி அதற்கான தீர்வுகளை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் எமக்கு ஏற்படுத்தித் தரப்படவேண்டும்.

இம்முறை வவுனியா பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு மாத்திரமே எமக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. செட்டிகுளம், நெடுங்கேணியில் இடம்பெற்ற பிரதேசமட்ட கூட்டங்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. அதன் தொடர்ச்சியாக மாவட்ட மட்ட ஒருங்கிணைப்புக் கூட்டங்களுக்கும் அழைப்பு விடுக்கப்படாத ஒரு நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி, விவசாயிகளின் பிரச்சினைகளை வெளிப்படுத்தி அதனைத் தீர்ப்பதற்கு மாவட்ட விவசாய சம்மேளனத்துக்கோ அல்லது விவசாயிகள் சார்ந்த பிரதிநிதிகளுக்கோ அபிவிருத்தி கூட்டங்களில் கலந்துகொள்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி தரவேண்டும்.
- எனக் குறிப்பிட்டுள்ளார்.

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உண்மைச் சூத்திரதாரிகள் யார்?

உயிர்த்த ஞாயிறன்று கத்தோலிக்க தேவாலயங்கள் மற்றும் முக்கிய இடங்கள் மீது நடத்தப்பட்ட தொடர் குண்டுத்தாக்குதல்கள் பற்றிய விசாரணை அல்லது புலனாய்வு முட்டுச் சந்தியில் வந்து தடைப்பட்டு நிற்கின்றது.

அது தொடர்பாக விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஒன்றரை வருடங்களுக்கு மேல் 'மலையைத் தோண்டி எலியைப் பிடித்த கதையாக' இப்போது சமர்ப்பித்திருக்கும் அறிக்கை இந்தத் தாக்குதலில் பெரிதும் பாதிக்கப்பட்ட கிறிஸ்தவ மக்களுக்கும் – அவர்களின் சமூகத் தலைவர்களுக்கும் – திருப்தி அளிப்பதாக அமையவில்லை என்பது கண்கூடு.

இந்தக் குண்டுத் தாக்குதலுக்கு முன்னரும் அரசியல் தரப்புகள் இதே மதவாத – இனவாத – விவகாரங்களை ஒட்டி மாறி, மாறி சேற்றை வாரித் தூற்றின. குண்டுத் தாக்குதல் நடந்த பின்னரும் அது தொடர்ந்து. இப்போது விசாரணை அறிக்கை வெளியான பின்னரும் நிலைமை அதுதான். மாற்றமில்லை.

இஸ்லாமிய தீவிரவாதத்தைத் தூண்டி அதை இலங்கையில் வெறிகொள்ள வைத்தமையில் பௌத்த தீவிரவாதத்துக்கும் பங்கிருகின்றது என்ற சாரப்பட இப்போதைய ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் வெளியான கருத்துத் தொடர்பில் சிங்கள, பௌத்த வெறிப்போக்குடைய விமல் வீரவன்ஸ போன்றோர் சீறுகின்றனர். அரசியல் ரீதியாகத் தமது எதிரிகள் எனக் கருதும் – முஸ்லிம்களின் தலைவர்களான – ரிஷாத் பதியூதீன் போன்றோரின் முகமூடியைக் கிழிக்க விடாமல் இப்போதைய அரசுக்குள் இருக்கும் சில வஞ்சக அரசியல்வாதிகள் தடுக்கின்றனர் என்பது அவர்களது குற்றச்சாட்டு.

இப்படி ஆதாரம் ஏதுமில்லாமல் தமது பெயரை இழுத்துப் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியமை தொடர்பில் அமைச்சர் விமல் வீரவன்ஸவுக்கு எதிராகக் குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்திருக்கின்றார் ரிஷாத் பதியுதீன்.

ஆக, தொடர் குண்டு வெடிப்புத் தொடர்பாக விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை சர்ச்சைகளுக்கு, சந்தேகங்களுக்கு, தெளிவின்மைக்கு, குழப்பங்களுக்கு தீர்வைத் தரவில்லை. மாறாக, புதிய சர்ச்சைகளை, சந்தேகங்களை, தெளிவின்மையை, குழப்பத்தைத்தான் அது தந்து நிற்கின்றது.

இந்தத் தொடர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் புலனாய்வுகளுக்கு அப்பால் நடந்த விசாரணை பற்றிய முதலாவது அறிக்கை அல்ல இந்த ஜனாதிபதி ஆணைக் குழு சமர்ப்பித்தது.

இன்னொரு குழுவும் இது போன்ற விரிவான விசாரணை அறிக்கை ஒன்றை முன்வைத்திருந்தது. அது, முன்னைய அரசின் நாடாளுமன்றத் தெரிவுக்குழு நடத்திய விசாரணை அறிக்கை. அந்த நாடாளுமன்றக் குழு விசாரணைகளை நடத்திய சமயத்தில் நாட்டின் புலனாய்வு முகவர் அமைப்புகள் இந்தத் தாக்குதல்கள் தொடர்பான புலனாய்வு விசாரணைகளை நடத்திக் கொண்டிருந்தன. ஆகையினால் அது விடயத்துக்குள் அதிகம் தலை நுழைக்கவோ, அதையொட்டிய கருத்துக்களை வெளிப்படையாக முன்வைக்கவோ அந்த விசாரணைக்குழுவுக்கு முட்டுக் கட்டைகள், நெருக்கடிகள் இருந்தன என்பது புரிந்து கொள்ளத்தக்கதே.

ஆனால், இப்போது அறிக்கை சமர்ப்பித்திருக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு அத்தகைய நெருக்கடிகள் இருக்கவில்லை. வெளிப்படையாக முடிவுகளை முன்வைக்கும் யதார்த்தப் புறநிலைமை ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு இருந்தது.

ஆனால், இத்தகைய தொடர் தாக்குதல்களின் மூளை மையம் குறித்து – சூத்திரதாரிகள் தொடர்பில் – அந்த நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் அறிக்கைக்கும், இந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைக்கும் இடையில் புதிதாக எதுவுமே வெளியே வரவில்லை.

தாக்குதல் சூத்திரதாரிகள் குறித்து இன்னும் தெளிவான படம் கிட்டவில்லை என்ற விசாரணை மற்றும் புலனாய்வு முடிவு, கிறிஸ்தவ மதத் தலைவரான கர்தினால் மல்கம் றஞ்சித் போன்றோரை சீற்றம் கொள்ள வைத்துள்ளது. அவர்களின் கருத்தில் நியாயம் இருப்பதாகவே தோன்றுகின்றது.

இந்தத் தொடர் தாக்குதல் குறித்து முற்கூட்டியே பெயர் விவரங்கள், திகதி, நாள்களுடன் முன்னெச்சரிக்கைத் தகவல்கள் பலமாகக் கிடைத்தும் அதைத் தடுக்கத் தவறி கோட்டை விட்டமை ஒருபுறம் என்றால், அதன் பின்னர் இரண்டு ஆண்டுகள் கழித்தும் சூத்திரதாரிகளை – மூளை மையத்தை – தெளிவாக அடையாளம் காண முடியவில்லை என்பது ஒரு நெருடலை – சந்தேகத்தை – எழுப்பாமல் இல்லை.

அதுவும் முப்பது வருட கால யுத்தத்தை எதிர்கொண்டு, அதன் காரணமாகத் தனது திறமையை மேம்பட்ட நிலையில் பேணியிருப்பதாகக் கூறப்படும் இலங்கையின் புலனாய்வுத்துறை இது விடயத்தில் கையை விரிப்பதாக் கூறப்படுவது எங்கோ இடிக்கின்றது என்ற எண்ணப்பாட்டையே தந்து நிற்கின்றது.

இவ்விடயத்தை ஒட்டி விசாரணை நடத்திய நாடாளுமன்றத் தெரிவுக்குழு தனது இறுதி முடிவில் குறிப்பிட்டவாறு ஏதோ தரப்புக்கு அரசியல் ரீதியில் பாரிய நன்மையை – குறுக்கு லாபத்தை – ஈட்டித் தருவதற்காக இது நடத்தப்பட்டதா என்ற நோக்கிலும் புலனாய்வு நடத்தப்பட வேண்டும். ஆனால் இந்த ஆட்சியில் அது நடக்கும் என்று நம்புவதற்கு இடமில்லை.

# குறுகிய காலத்தில் மக்கள் வெறுப்பை நிறையவே சம்பாதித்துள்ளது அரசு!

## முருத்தெட்டுவே தேரர் சுட்டிக்காட்டு

**கொழும்பு, மார்ச்.12**

**அரசாங்கம் தொடர்பில் மக்கள் வினவும் கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. குறுகிய காலத்தில் மக்களின் வெறுப்பை அரசாங்கம் பெற்றுக் கொண்டுள்ளது. ஆகவே, விரைவில் மக்களுடன் இணைந்து போராட வேண்டிய நிலை ஏற்படும். அரச தலைவர்கள் தவறுகளை திருத்தி ஆட்சியதிகாரத்தை முன்னெடுப்பது அவசியமாகும் என அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.**

அபயராம விகாரையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

அரசாங்கத்தின் ஒரு சில செயற்பாடுகள் வெறுக்கத்தக்கனவாகக் காணப்படுகின்றன. அமைச்சுக்களின் செயலாளர்கள் உரிய காரணமின்றி இடமாற்றம் செய்யப்படுகின்றமை அரசியல் அழுத்தங்களை அடிப்படையாகக் கொண்டதாகக் காணப்படுகிறது.

ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முன்னின்று செயற்பட்ட எம்மிடம் மக்கள் கேள்வி கேட்கிறார்கள். மக்களின் கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாத நிலை காணப்படுகிறது. குறுகிய காலத்தில் அரசாங்கம் மக்களின் வெறுப்பை பெற்றுக் கொண்டுள்ளது என்றே குறிப்பிட வேண்டும்.

ஜனாதிபதி , பிரதமர் ஆகியோரை ஆட்சிக்கு கொண்டு வர முன்னின்று செயற்பட்டுள்ளோம். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் இடம்பெறும் ஒரு சில செயற்பாடுகளைப் பார்த்து மௌனம் காப்பது பொருத்தமற்றதாகும்.



உரிய தீர்மானத்தை சிறந்த முறையில் எடுக்க வேண்டும்.

அரசாங்கம் தவறுகளை திருத்திக் கொண்டு செயற்பட வேண்டும். இல்லாவிடின் நாட்டு மக்களுடன் ஒன்றிணைந்து அரசாங்கத்துக்கு எதிராகப் போராட வேண்டிய நிலை ஏற்படும். அரசாங்கத்தின் குறைகளை சுட்டிக்காட்டி அரச தலைவர்களை நல்வழிப்படுத்தும் பொறுப்பு மதத் தலைவர்களுக்கு உண்டு.- என்றார்.

# இந்திய உயர் ஸ்தானிகர் திருக்கேதீஸ்வரம் விஜயம்!





வட மாகாணத் திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் நேற்று வியாழக்கிழமை வழிபாடுகளில் ஈடுபட்டார்.

30 கோடியே 26 லட்சம் ரூபா செலவில் இந்த ஆலய புனரமைப்புப் பணிகளை இந்தியா மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அத்தோடு, பல தசாப்தகாலமாக இலங்கை – இந்தியா இணைப்புப்பாலமாகவிருந்த ராமர்சேது பகுதியில் இந்திய உயர் ஸ்தானிகர் விசேட வழிபாடுகளில் ஈடுபட்டார்.

ஆயிரம் ஆண்டுகள் பழைமையான தொடர்புகளை உருவாக்குவதில் வரலாற்று கட்டமைப்புக்களின் வகிபாகத்தை நினைவுகூர்ந்த இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, இந்திய இலங்கை மக்களின் பிணைப்புக்கள் வலுவடையும் எனக் குறிப்பிட்டார்.

# அனைத்துப் பல்கலைக்கழகங்களும் அடுத்த மூன்று வாரத்துக்குத் திறப்பு!

நாட்டின் அடுத்த மூன்று வாரங்களுக்குள் நாட்டிலுள்ள அனைத்து தேசிய பல்கலைக் கழகங்களையும் மீண்டும் திறப்பதற்கு எதிர்பார்த்துள்ளாக இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்காக சுகாதார அதிகாரிகளிடம் அனுமதி கோரியுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் சம்பத் அமர துங்க குறிப்பிட்டார்.

இவ்வாறு திறக்கப்படும் பல்கலைக்கழகங்களில் மாணவர்களுக்கான கொவிட் தடுப்பூசியை ஏப்ரல் முதல் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

# சாதாரண தர விடைத்தாள் மதிப்பீடு பணிகள் 27 இல் ஆரம்பமாகின்றன!

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் எதிர்வரும் 27ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

சாதாரண தரப் பரீட்சையின் நுண் கலை செய்முறைப் பரீட்சையை மே மாதத்தில் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.



க.பொ.த தரப் பரீட்சை நடைபெற்ற கோட்டே ஆனந்த பரீட்சை மண்டபத்துக்கு விஜயம் செய்தபோதே அமைச்சர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய, சாதாரண தரப் பரீட்சையை வெற்றிகரமான முறையில் நடத்தி முடிக்க ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் இதன்போது நன்றி தெரிவித்துள்ளார்.

# மீள்பதிப்பு இந்து கலைக் களஞ்சியம் பிரதமரின் தலைமையில் வெளியீடு!









சைவ தமிழ் மக்களால் மகான்னத நாளாக அனுஷ்டிக்கப்பட்டுவரும் மகா சிவராத்திரி நன்னாளை முன்னிட்டு, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் மீள்பதிப்புச் செய்யப்பட்ட பன்னிரெண்டு தொகுதிகளைக் கொண்ட இந்து கலைக் களஞ்சியம், புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் 1988 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்து கலைக் களஞ்சிய உருவாக்கப் பணி 2014 ஆம் ஆண்டில் பன்னிரெண்டு தொகுதிகளை நிறைவு செய்திருந்தது.

அந்தக் காலப்பகுதி, தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இலங்கையின் ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியாகவும் இந்தச் செயற்றிட்டத்துக்காக ஊக்கம் நல்கிய காலமாகவும் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

அதற்கமைய மீள்பதிப்புச் செய்யப்பட்ட இந்து கலைக் களஞ்சியத்தின் ஆரம்ப பிரதிகள் பிரதமரால் இந்து மதகுருமார்களுக்கு வழங்கிவைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்களான கலாநிதி சுரேன் ராகவன், அங்கஜன் இராமநாதன், எம்.ரமேஷ்வரன் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன ஆகியோருக்கும் இந்து கலைக் களஞ்சியத்தின் பிரதிகள் வழங்கிவைக்கப்பட்டன.

இலங்கையின் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் ஆற்றும் தனித்துவமான சேவைக்கு இதன்போது இந்து மதகுருமார்கள் பாராட்டுத் தெரிவித்தனர்.

இதன்போது பிரதமரின் அறிவுறுத்தலுக்கு அமைய இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நாடளாவிய ரீதியில் சைவத் தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் உள்ள ஆலயங்களில், மகா சிவராத்திரி நிகழ்வை சிறப்புற நிகழ்த்த ஊக்கம் நல்கும் வகையில் பகுதியளவிலான அனுசரணையாக நிதியுதவி வழங்கும் செயற்றிட்டமும் இடம்பெற்றது.

அந்தவகையில், ஐம்பது ஆலயங்களுக்கு தலா ரூபா 50 ஆயிரம் வீதம் நிதியுதவி வழங்கும் இந்தச் செயற்றிட்டத்தின் ஆரம்ப நிகழ்வாக கொழும்பு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம், வரகாபொல ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம், ஹொரணை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் ஆகிய ஆலயங்களுக்கு இந்நிதியுதவி வழங்கி வைக்கப்பட்டது.

சிவராத்திரி விரதத்தை பக்திபூர்வமாகவும், சுகாதார நடைமுறைகளுடனும் அனுஷ்டிப்பதற்கான அறிவுறுத்தலுடன் இந்நிதி வழங்கப்பட்டது.

குறித்த நிகழ்வில், கொழும்பு இராம கிருஷ்ணமிஷன் தலைவர் சுவாமி அக்சராத்மானந்த மகராஜ், சின்மயாமிஷன் சுவாமிகள் குணாதீதானந்த சரஸ்வதி, பிரதமரின் இந்து சமய விவகாரங்களுக்கான இணைப்பாளர் இராமச்சந்திரக் குருக்கள் பாபு சர்மா, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன், கலாநிதி சுரேன் ராகவன், மருதபாண்டி இராமேஸ்வரன், புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்த்தன, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள முன்னாள் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன், கலாநிதி க.ரகுபரன், இந்துப் பண்பாட்டு நிதியத்தின் உறுப்பினர் சின்னத்துரை தனபால உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு பொறுப்பேற்பு சஜித் தெரிவித்தமைக்கு ஐ.தே.க. தொடர்பில்லை!

## ஐ.தே.க. பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவிப்பு

உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல் சம்பவம் தொடர்பான பொறுப்புகளை ஏற்றுக்கொள்வதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரேமதாஸ தெரிவித்திருந்தால், அது அவரது தனிப்பட்ட கருத்தாகும். அந்த கருத்துக்கும் எமக்கும் எவ்வித தொடர்புமில்லை என்று ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன் போது அவர் மேலும் கூறியவை வருமாறு–

உயிர்த்தஞாயிறுதினத் தாக்குதலின் பின்னர் , நாட்டின் தலைவர் வெளிநாடு சென்றிருந்த சந்தர்ப்பத்திலும் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க , அப்போதைய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன ஆகியோர் விரைந்து செயற்பட்டிருந்ததுடன், அதற்கமைய தாக்குதலின் பின்னர் இடம்பெறவிருந்த பாரிய பாதிப்புகளை தடுக்க நடவடிக்கை எடுத்தனர்.

சம்பவதினத்தன்று இரவு 9 மணியாகும் போது குண்டுதாரிகள் தொடர்பிலும் அவர்களின் அணிதொடர்பிலும் பொலிஸார் விவரங்களைப் பெற்றுக் கொண்டு, மீண்டும் ஒருதாக்குதல் இடம்பெறாதவகையில் அவற்றை



தடுக்க நடவடிக்கை எடுத்திருந்தனர். அதனால் ஐக்கிய தேசியக் கட்சி பொறுப்புடன் செயற்படவில்லை என்று கூறமுடியாது.

அப்போது நாட்டின் ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனவே பதவி வகித்தார். அவரே பாதுகாப்பு அமைச்சராகவும் செயற்பட்டார். அதனால் இந்தத் தாக்குதல் சம்பவத்தை தடுப்பதற்கான பொறுப்பு அவரையே சார்ந்துள்ளது. எனினும் தாக்குதல் இடம்பெற்று 2 வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் இன்னமும், தற்கொலைதாரிகளுக்கான உதவி ஒத்தாசைகளை வழங்கியவர்கள் தொடர்பிலும், பயங்கரவாதி சஹ்ரானுக்கு அரச அனுசரணையுடன் ஊதியம் வழங்கியவர்கள் தொடர்பிலும் மற்றும் வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றனர் எனக் கூறப்படும் நபர்கள் தொடர்பிலும் எந்த தகவல்களும் சேகரிக்கப்படவில்லை.

ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளை நடத்திய போதிலும், அதிலும் முக்கிய தகவல்கள் எதுவும் இல்லை. இந்நிலையில் இது தொடர்பான விசாரணைகளை குற்றப் புலனாய்வு பிரிவிடம் கையளித்திருந்தால், தாக்குதலுடன் தொடர்புடைய அனைவரது விவரங்களையும் அறிந்து கொண்டிருக்க முடியும்.

நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க, உயிர்த்தஞாயிறுதினத் தாக்குதலுடன் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு தொடர்புள்ளதாகத் தெரிவித்திருந்தால், அதற்கான சாட்சிகள் அவரிடம் இருந்திருக்கலாம். அதன் காரணமாகவே அவர் அவ்வாறு தெரிவித்திருக்கலாம். ஆனால் அவர் அதனை உரிய தரப்பினரிடமே தெரிவித்திருக்க வேண்டும். தன்னிடமுள்ள ஆதாரங்களைக் காண்பித்து உரிய தரப்பினரிடம் அதனை அவர் கையளித்திருந்தால், அதில் சிக்கல் ஏற்பட்டிருக்காது.

இதேவேளை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தாக்குதலின் பொறுப்பை தான் ஏற்றுக் கொள்வதாக தெரிவித்திருந்தால் அது அவரதும், ஐக்கிய மக்கள் சக்தியினதும் கருத்தாகும். அந்தக் கருத்து ஒருபோதும் ஐக்கிய தேசியக் கட்சியுடையதாக அமையாது.

# பொதுமக்களுக்குக் கொரோனா தடுப்பூசி வழங்கும் மையத்துக்கு பிரதமர் விஜயம்!

கொழும்பு நகரசபைப் பகுதியில் பொது மக்களுக்கு கொரோனாத் தடுப்பூசி வழங்கும் திட்டத்தை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேரடியாகச் சென்று பார்வையிட்டுள்ளார்.

நாரஹென்பிட்டியில் அமைந்துள்ள அபயராம விகாரைக்கு நேற்று (வியாழக்கிழமை) சென்றிருந்த அவர், அங்கு ஆயிரத்து 200 பேருக்கு கொரோனா தடுப்பூசி வழங்கும் திட்டத்தை மேற்பார்வை செய்தார்.

இந்தத் திட்டம் கொழும்பு நகரசபையின் உறுப்பினர்களான கலகம தம்மரன்சி தேரர், வைத்தியர் பிரதீப் காரியவசம் மற்றும் மனோரி விக்ரமசிங்க ஆகியோரின் வேண்டுகோளுக்கு அமைய செயற்படுத்தப்பட்டது.

அத்துடன், இந்த தடுப்பூசி முகாம் கொழும்பு நகரசபையின் பிரதம மருத்துவ அதிகாரி ருவான் விஜயமுனி மற்றும் மருத்துவக் குழுவினரின் பங்குபற்றலில் முன்னெடுக்கப்பட்டது.

இதில், நாரஹென்பிட்ட அபயராம விகாரையின் விகாராதிபதி மேற்கு மாகாணத் தலைவர் சங்கநாயக்க முருத்தெட்டுவே ஆனந்த நாயக்க தேரர், மகா சங்கத்தினர், வைத்தியர்கள், வைத்திய தாதிகள் மற்றும் ஊழியர்கள் உட்பட பல பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.





# கொரோனாவிலிருந்து 351 பேர் குணமடைவு!

நாட்டில் மேலும் 351 பேர் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர் என தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், கொரோனாத் தொற்றிலிருந்து மீண்டவர்களின் மொத்த எண்ணிக்கை 83ஆயிரத்து 561ஆகப் பதிவாகியுள்ளது.

அத்துடன், இலங்கையில் இதுவரையான மொத்த கொரோனாப் பாதிப்பு 86 ஆயிரத்து 685 ஆகப் பதிவாகியுள்ளதுடன் அவர்களில், இன்னும் இரண்டாயிரத்து 609 பேர் தொடர்ந்தும் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இதேவேளை, நாட்டில் இதுவரை 515 பேர் கொரோனாத் தொற்றால் மரணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரஞ்சன் தொடர்பான நிலைப்பாட்டில் சபாநாயகர் மூர்க்கத்தனப் போக்கு!



சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தொடர்பான தனது நிலைப்பாட்டில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தொடர்ந்தும் உறுதியாகவுள்ளார்.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸ, ரஞ்சன் ராமநாயக்கவுக்கு நாடாளுமன்ற கூட்டங்களில் கலந்து கொள்ள ஏன் அனுமதி வழங்கப்படவில்லை எனக் கேள்வி எழுப்பினார்.

அத்தோடு ரஞ்சன் ராமநாயக்க சார்பில் ஒரு பிரேரணையை சமர்ப்பிக்க சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன எதிர்க்கட்சியை அனுமதிக்கவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

ரஞ்சன் ராமநாயக்கவின் நாடாளுமன்ற ஆசனம் தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என நீதிமன்றம் நாடாளுமன்றத்துக்கு அறிவுறுத்திய போதிலும் சபாநாயகரின் நடவடிக்கைகள் நாடாளுமன்ற மரபுகளுக்கு எதிரானவை என்றும் குற்றம் சாட்டினார்.

மேலும் இந்த விவகாரத்தில் அவர் கண்மூடித்தனமாக இருக்கிறார் எனவும் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில், நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க சபை அமர்வுகளில் கலந்து கொள்ள அனுமதிப்பது சபாநாயகரின் பொறுப்பு என்றும் சுட்டிக்காட்டினார்.

இருப்பினும் ஆளும் கட்சியால் அவரது இந்தக் கேள்வி தொடர்பாக ஆட்சேபனை எழுப்பப்பட்ட போதும் இதற்குப் பதிலளித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, இந்த விவகாரம் தற்போது நீதிமன்றத்தின் முன் உள்ளது. – என்றார்.

அத்தோடு இந்த மாத இறுதிக்குள் ரஞ்சன் ராமநாயக்கவின் நாடாளுமன்ற ஆசனம் தொடர்பாக உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பை அறிவிக்கும் என எதிர்பார்ப்பதாகவும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன குறிப்பிட்டார்.

# சிவில் சமூகம் – இராணுவம் உறவை ஊக்குவித்து இலக்கை அடையலாம்!

## இப்படிக் கூறுகிறார் பாதுகாப்பு செயலர்

கல்வியின் மூலம் சிவில் சமூகத்திற்கும் இராணுவத்துக்கும் இடையிலான உறவுகளை ஊக்குவிக்க முடியும் என்பதோடு , இதன் மூலம் உலகளாவிய இலக்குகளை இலகுவாக அடைய முடியும் என்று பாதுகாப்பு செயலாளர் ஓய்வு பெற்ற ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்தார்.

மக்கள் மத்தியில் ஒருமைப்பாடு, ஜனநாயக பங்கேற்பு, பொருளாதார சமத்துவம், பரஸ்பர புரிதல் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றின் வளர்ச்சியின் முக்கியத்துவத்தை பல்கலைக்கழகக் கல்வியூடாக வளர்க்க முடியும் என்பதை மனதில் கொள்ள வேண்டும் என்றும் பாதுகாப்பு செயலாளர் தெரிவித்தார்.

இரத்மலானையிலுள்ள ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பல்கலைக்கழக துணைவேந்தரின் அழைப்பின் பேரில் நிகழ்வில் கலந்து கொண்ட பாதுகாப்பு செயலாளரால் பல்கலைக்கழகத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் உத்தியோகபூர்வ சின்னம் வெளியிடப்பட்டது. கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தை இலங்கையில் ஒரு முன்னணி பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கு மேலும் மேம்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதை பாதுகாப்பு செயலாளர் சுட்டிக்காட்டினார்.

பல்கலைக்கழக வளாகத்தில் புதிதாக கட்டப்பட்ட கேட்போர் கூடம், அதிநவீன ஆய்வக கட்டடம், புதிய இயந்திர உருவகப்படுத்துதல் மற்றும் கண்டுபிடிப்பு ஆய்வகம், விளையாட்டு வளாகம், பணியாளர்கள் தங்குமிடம் கட்டடம் மற்றும் புதுப்பிக்கப்பட்ட கிளப் ஹவுஸ் கட்டடம் ஆகியவை இதன் போது பாதுகாப்பு செயலாளரால் திறந்து வைக்கப்பட்டன.

நாட்டில் அமைதி மற்றும் பாதுகாப்பைப் பேணுவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்த சிறந்த அதிகாரிகளை உருவாக்கும் பெருமை இப்பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்கு உண்டு என்றும், மூன்று ஆயுதப் படைகளின் அதிகாரிகளுக்கு சிறந்த மற்றும் உயர்தர கல்வி வசதிகளை வழங்கும் நிறுவனம் இது என்றும் அவர் கூறினார்.



> "அரசாங்கம் மக்களுக்கு பொறுப்புக்கூறலில் இருந்து தோல் வியுறும் போதே இவ்வாறான சர்வதேச விசாரணையை நாட வேண்டி ஏற்படும். ஏனெனில் அரசாங்கம் மக்களை ஏமாற்றியுள்ளது. அவர் அவ்வாறு இந்தத் தாக்குதல் விடயத்தில் சர்வதேச விசாரணையைக் கோர முடியுமானால் 2009 இன் இறுதி யுத்த காலகட்டத்தில் இடம்பெற்ற யுத்தக்குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணையினை கோருவதற்கு எமக்கு நியாயமான காரணங்கள் அதிகமாகவே உள்ளன."

# பொறுப்புக்கூறலிலிருந்து அரசு விலகினால் சர்வதேச விசாரணை கோரும் நிலை வரும்!

## நாம் 11 ஆண்டுகள் அதற்காகக் காத்திருக்கின்றோம் கிறிஸ்தவர்கள் 2 ஆண்டுகளில் தள்ளப்பட்டுள்ளனர்

இறுதி யுத்தத்தில் எமது மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இன அழிப்புக்கு நியாயத்தை பெற்றுக்கொடுக்க வேண்டும், பொறுப்புக் கூறலை நிறைவேற்ற வேண்டும் என பதினொரு ஆண்டுகளாக நாம் வலியுறுத்திக் கொண்டுள்ளோம், அதனையே இரண்டு ஆண்டுகளில் கிறிஸ்தவ சமூகம் இன்று கேட்கும் நிலைமை உருவாகியுள்ளது.

எனவே உள்ளக விசாரணை பொறிமுறையில் நம்பிக்கை இல்லை என்பது இன்று நிரூபனமாகிவிட்டது எனவும் பொறுப்புக்கூறலை நிறைவேற்றுவதில் இராச்சியம் தோற்றுவிட்டது எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சபையில் தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் ஆளும் கட்சி கொண்டுவந்த சபை ஒத்தி வைப்பு வேளை பிரேரணை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனை கூறினார்.

அவர் அங்கு உரையாற்றிய உரையின் முழு வடிவமும் வருமாறு –

குழுக்களின் பிரதி தலைவர் அவர்களே, இன்றைய நாளின் விவாதத்தில் பேச தந்த வாய்ப்பிற்காக நன்றி, இதனை ஆரம்பிக்கும் இவ்வேளையில், நாம் வெறுமனே ஓர் அறிக்கையை அல்லாது இரண்டு வருடங்களுக்கு முன் இடம்பெற்ற, 270 இற்கும் அதிகமான உயிர்களைக் காவு கொண்ட, 500 இற்கும் அதிகளவிலானோரை காயமடையச்செய்த தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பாக விவாதிக்கின்றோம் என்பதை இந்த அவையினரின் கவனத்தில் கொண்டுவர விரும்புகிறேன். வெவ்வேறு இடங்களில் இத்தகைய ஒருங்கிணைந்த தாக்குதல் சில மணிநேரங்களுக்குள் நடந்தன என்றும் அதுவும் உயிர்த்த ஞாயிற்றுக்கிழமை நடந்தது என்றும் நான் கூறுவேன். அந்தத் தாக்குதலின் இலக்கு கிறிஸ்தவ தேவாலயங்களே என்பது தெளிவாகத் தெரிகின்றது.

கத்தோலிக்க சமூகத்திற்கே பாதிப்பு ஏற்பட்டது என்று சொல்வதை கேள்விப்படுகின்றோம். அதுவே உண்மை, அதிகளவிலான மரித்த மற்றும் காயப்பட்ட மக்கள், தாக்குதலுக்கு உள்ளான இரு கத்தோலிக்க திருச்சபையைச் சார்ந்தவர்களாகவே காணப்பட்டனர். இருப்பினும் கிழக்கு கரையோரப்பகுதியான மட்டக்களப்பின் சீயோன் தேவாலயத்தின் தாக்குதலில் கொல்லப்பட்ட பெருமளவிலானோர், அன்று ஞாயிறு பாடசாலை நிறைவுற்று ஆராதனை தொடங்கும்வரை காத்திருந்த சிறுவராவர். மேலும் தாக்குதலுக்கு உள்ளான இரு நட்சத்திர விடுதிகளிலும் சிலர் கொல்லப்பட்டும் காயமுற்றும் காணப்பட்டனர்.

எனவே, இது கத்தோலிக்க மற்றும் புரொட்டஸ்தாந்து கிறிஸ்தவ மக்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதலாகும் அத்தோடு இந்தப் பெரிய , தாக்குதலுக்குப் பின்னரான கிறிஸ்தவர்களின் மாறுத்தரத்தை நாம் மறக்கக் கூடாது. கொட்டாஞ்சேனை ஆலயத்தின் குருவானவர் இந்தத் தாக்குதல் இடம்பெற்றவேளை 'இதனை முன்னெடுத்தவர்களை நாம் மன்னிக்கின்றோம்' என உண்மையான கிறிஸ்தவ தன்மையோடு தெரிவித்திருந்தார். அவ்வாறே சீயோன் தேவாலயத்தின் பாஸ்டர் ரொஷான் மகேசனும் நாட்டுக்குத் திரும்பிய வேளை இதனையே தெரிவித்திருந்தார். இருப்பினும் கிறிஸ்தவத்தின் அடிப்படையான மன்னிப்போடுகூட நீதியை நாம் குழப்பிக்கொள்ளக் கூடாது, நீதியும் இரக்கமும் இரு கண்கள் போன்றன அவை ஒன்றுக்கொன்று முரணானவை அல்ல. நாம் இப்போது தவக்காலத்தை அனுஷ்டிக்கின்றோம், ஒரு கிறிஸ்தவன் என்ற முறையில் பெரிய வெள்ளியின் இயேசு கிறிஸ்துவின் பாடுகளையும் மரணத்தையும் தொடர்பில் அதிகம் உணர்கின்றேன். இருப்பினும் கதை அதோடு முற்றுப்பெறவில்லை. மூன்றாம் நாள் மரித்தோரிலிருந்து உயிர்த்தார். எமது பாவங்களுக்கு மன்னிப்பை வழங்க அவர் மரித்தபோதும் வெற்றிகரமாக உயிர்த்ததன் மூலம் அப்பாவத்தையே தோற்கடித்தார். இந்தக் கிறிஸ்தவத்தின் பிரதானமான செய்தியின் அடிப்படையிலேயே திருச் சபைகளும் மன்னிப்பதற்குத் தயாராக இருந்தன. நாம் மன்னிக்க இயலாதுபோனால் எவ்வாறு மன்னிப்பை எதிர்பார்க்க முடியும்? மன்னிப்பின் அளவிற்கு நீதியும் முக்கியமானதே, நீதி இல்லாது இந்த வட்டம் முற்றுப் பெறாது. அதனாலேயே நீதியை வழங்குதல் அரசாங்கத்தின் பொறுப்பாகின்றது.

அரசாங்கங்கள், நன்மை செய்பவர்களை தட்டிக் கொடுக்கவும் தீமை செய்பவரை தண்டிக்கவும் கடமைப் பட்டுள்ளது. ஆனாலும் தொடர்ந்து வந்த அரசாங்கமும் இந்த விடயத்தில் நீதியை நிலைநாட்டத் தவறியுள்ளது. இந்த மன்றில் காலை இடம்பெற்றதுபோல குற்றச்சாட்டுக்களை பரிமாற நான் விரும்பவில்லை, அவ்வாறு குற்றஞ்சாட்டுக்களை பரிமாறுமிடத்து, கொல்லப்பட்ட, காயப்பட்ட மற்றும் அன்பானவர்களை இழந்த அனைவருக்கும் அநீதி இழைப்பதாகவே அமையும்.

இந்த விவாதத்தின் நோக்கமும் அதுவல்ல. இந்த விடயம் தொடர்பாக நாம் அநேக விசாரணைகளை முன்னெடுத்துள்ளோம் இதன் மூல காரணத்தை அறிவது அவசியம். கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தமை போல நாம் இந்தத் தாக்குதலின் சூத்திரதாரியை இனங்கண்டுள்ளோமா? இல்லை, மஹிந்தானந்த அழுத் கமகே, சஹ்ரானே பிரதான சூத்திரதாரி எனத் தெரிவித்திருந்தார், இல்லை நாம் யாரும் இதனை ஏற்றுக்கொள்ளப் போபவர்கள் அல்லர். பேராயர் அவர்களும் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே தான் இந்த அறிக்கை வெளிவந்த நாள் முதல் தொடர்ச்சியாக பிரதான சூத்திரதாரி யார் என்ற கேள்வியைக் கேட்டுவருகின்றார். இந்த அறிக்கை வெளிவந்ததன் பின்னரே கறுப்பு ஞாயிறு போராட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த அறிக்கை அந்தப் பிரதான சூத்திரதாரியை அடையாளம் காட்டவில்லை.

இல்லையெனில் இந்த அறிக்கை ஒரு தரமான அறிக்கை என்பதைத் தெரிவிக்கின்றேன். இந்த விடயம் தொடர்பாக ஆழமாக ஆராய்ந்துள்ளார்கள். என்னிடம் நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கையும் உள்ளது, இந்த இரண்டையும் வாசிக்கும்படி நான் கேட்டுக்கொள்கின்றேன். இந்த இரண்டின் ஒத்த தன்மையையும் நீங்கள் காணக்கூடியதாக இருக்கும். நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கையில் இருக்கும் அநேக விடயங்கள் இந்த அறிக்கையிலும் இருக்கின்றமையைக் காணலாம். அநேகமான பரிந்துரைகளும் இந்த அறிக்கையிலும் அவ்வாறே இருக்கின்றமையை காணலாம்.

ஆனாலும் இரண்டிலும் இந்தத் தாக்குதல் யாரால் ஒருங்கிணைக்கப்பட்டது என்று வெளிப்படுத்தப்படவில்லை. நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கையின் பக்கம் 3 இல் உள்ள சுருக்கத்தை நான் வாசிக்கிறேன் 'நாடாளுமன்ற தெரிவுக்குழு தேசிய உளவுத் துறையின் பொறிமுறை தொடர்பாக முக்கியமான விடயங்களை வெளிப்படுத்துகிறது. சிலருக்கு மட்டுமே தெரிந்த உளவுத்துறையின் தகவல்கள் சம்பந்தப்பட்ட நிர்வாகங்களுக்குத் தெரியப்படுத்தப்படவில்லை. மேலும் அந்த அறிக்கையில் அவ்வருடம் இறுதிப்பகுதியில் இடம்பெறவிருந்த ஜனாதிபதித் தேர்தலை எதிர்பார்த்து, நாட்டில் அச்சமான சூழ்நிலையையும் குழப்பத்தையும் நிலையற்ற தன்மையையும் ஏற்படுத்த அதிகாரம் கொண்டோர் வேண்டுமென்றே இந்த உளவுத்துறையின் தகவல்களின் அடிப்படையில் செயலாற்றாமல் போனார்களோ என்பதை ஆராய மேலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு சூழ்நிலை நாட்டில் ஏற்படுமிடத்து, இந்தத் தீவிரவாதங்களைக் கட்டுப்படுத்த ஓர் ஆட்சி மாற்றத்தை மக்கள் எதிர்நோக்க செய்யும். தற்செயலாகவோ இல்லாமலோ ஜனாதிபதி தேர்தலுக்கு அண்மித்த காலகட்டத்தில் இந்த அச்சமான சூழ்நிலை இயல்புக்கு திரும்புகிறதோடு, ஜனாதிபதி தெரிவுக்குழுவின் அறிக்கையில் 2019 இல் இலங்கை இராணுவம் மற்றும் பாதுகாப்புத் துறையின் தலைமை பொறுப்புக்களில் மாற்றங்கள் இடம்பெற்ற சூழ்நிலையிலேயே இவை நிகழ்கின்றன என்பதையும் சுட்டிக்காட்டுகின்றது.

இவை இலங்கையின் ஜனநாயக ஆட்சிமுறை, தேர்தல் செயல்முறைகள் மற்றும் நாட்டின் பாதுகாப்பு தொடர்பான முக்கியமான அவதானிப்புகளாக இருக்கின்றமையோடு, அவசரமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய விடயங்களாகும். யார் இதன்மூலம் பயனடைந்தனர் என்றும் யார் பயனடைய யார் துணை நின்றனர் என்பதையும் நாம் அறிய வேண்டும், நம் எல்லோருக்கும் இதன் பதில் தெரியும், மேலும் இரண்டு வருடங்கள் கடந்த நிலையில், இரண்டு விசாரணைகள்: அதிலும் முதன்மை விசாரணை உச்ச நீதிமன்றத்தின் நீதிபதியொருவரின் முன்னிலையில் இடம்பெற்ற நிலையில் இன்னமும் பிரதான சூத்திரதாரிகள் அடையாளம் காணப்படாவிட்டால் யாதேனும் மூடி மறைக்கப்படுகின்றனவா?

இந்தத் தாக்குதல்கள் நடைபெற்று முடிந்த பின்பதாகவே விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டனவா? இவை தொடர்பில் யாரும் முன் அறிந்திருக்கவில்லையா? இல்லை. இந்தத் தாக்குதல் தொடர்பான தகவல்கள் முன்னதாகவே தெரியப்படுத்தப்பட்டிருந்தது. தாக்குதல் நடத்தப் போகின்றோரின் பெயர் விவரங்களோடு குறைந்தது 3 கிழமைகளுக்கு முன்னதாகவே தகவல்கள் எழுத்து மூலம் உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தப்பட்டது. சகல தகவல்களும் தெரியப்படுத்தப்பட்டிருந்தன. தாக்குதல் இடம்பெற சில நிமிடங்களுக்கு முன்னும் அதிகாரிகளுக்கு தகவல்கள் தெரிவிக்கப்பட்டன. இவை தொடர்பான சகல விடயங்களும் இந்த இரு அறிக்கைகளிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் நாம் 55 நபர்களை விசாரித்தோம், ஜனாதிபதியின் ஆணைக்குழுவில் 457 நபர்கள் சாட்சியமளித்துள்ளனர். இவை அனைத்தின் பின்பதாகவும், முன்னறிவித்தல்கள் கிடைக்கப்பெற்ற நிலையிலும் நாம் இன்னமும் பிரதான சூத்திரதாரிகளை அடையாளம் காணவில்லை என்று சொல்லுவோமாயின் ஏதோ ஒரு பாரிய தவறு இடம்பெற்றுள்ளது.

(08ஆம் பக்கம் பார்க்க)

# துறைமுக மேற்கு முனையம் அதானி நிறுவனத்துக்கு வழங்கப்பட்டமை தனிப்பட்ட நோக்கத்துக்காகவே!

## அஸாத் சாலி சுட்டிக் காட்டு

இந்தியாவில் அதானி நிறுவனத்துக்கு எதிராக மக்கள் போராட்டங்களை முன்னெடுத்துவரும் நிலையில், தனிப்பட்ட நோக்கத்தில் அந்த நிறுவனத்துக்கு கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தை வழங்குவதற்கு அரசாங்கம் முற்படுகின்றது என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஷாத் சாலி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த புதன்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு –

நாட்டின் தற்போதைய நிலைவரங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தும் போது எமக்கு சுதந்திரம் கிடைத்து விட்டதா? என்ற சந்தேகம் ஏற்படுகின்றது. இப்போது மக்கள் அன்றாடத்தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கே பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். கொரோனா வைரஸ் பரவலை எவ்வாறு எதிர்கொள்வது, அதற்கு மத்தியில் எவ்வாறு தொழிலுக்கு, பாடசாலைக்குச் செல்வது, எத்தகைய நடைமுறைகளைப் பின்பற்றுவது ஆகியவை தொடர்பில் இராணுவத்தினர் எமக்குக் கற்பிக்கின்றார்கள்.

இவற்றுக்கு மத்தியில் கொழும்புத்துறைமுகத்தின் கிழக்கு முனையம் மற்றும் மேற்கு முனையம் என்பவையும் முக்கிய பேசுபொருளாக மாறியிருக்கின்றன. அரசாங்கம் இந்தியாவிற்கு கிழக்கு முனையத்தை வழங்குவதாகக் கூறியது. அதன்பின்னர் இந்தியாவின் அதானி நிறுவனத்திற்கு அதனை வழங்குவதாக ஜனாதிபதி கூறினார். எனினும் அதனை வழங்கமுடியாத நிலையேற்பட்டதைத் தொடர்ந்து, தற்போது மேற்கு முனையத்தை வழங்குவதாக இராஜதந்திர அடிப்படையில் இந்தியாவிற்கு அறிவித்துவிட்டதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எனினும் அத்தகைய உத்தியோகபூர்வ தகவல்கள் எவையும் கிடைக்கப்பெறவில்லை என்று இலங்கைக்கான இந்தியா உயர்ஸ்தானிகர் கூறியமையைத் தொடர்ந்து, தாம் இந்திய அரசாங்கத்துடன் பேசவில்லை என்றும் நேரடியாக அதானி நிறுவனத்துடன் இதுபற்றிப் பேசியதாகவும் உதய கம்மன்பில கூறுகின்றார். இது தாய், தந்தையின் பெயர்கள் இல்லாத பிறப்புச்சான்றிதழைப் போன்று உள்ளது.

இந்தியாவில் அதானி நிறுவனத்திற்கு எதிராக மக்கள் போராட்டங்களை முன்னெடுத்துவரும் நிலையில், தனிப்பட்ட 'டீல்' ஒன்றின் ஊடாக அந்நிறுவனத்திற்கு மேற்கு முனையத்தை வழங்குவதற்கு அரசாங்கம் முற்படுகின்றது. இவ்விடயம் தொடர்பில் அரசாங்கத்தின் பிரதிநிதிகள் ஒவ்வொருவரும் ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்களையே கூறுகின்றனர். அதே போன்று இந்தியாவிற்கு வழங்கிய திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை மீளப்பெறுவதற்கு உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாக உதய கம்மன்பில தெரிவித்தார்.

ஆனால் அது தொடர்பாகப் பிரதமரிடம் வினவிய போது, 'பைத்தியம்' என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார்.



இதுவே தற்போதைய அரசாங்கத்தினதும் அமைச்சரவையினதும் நிலையாகும்.

அடுத்ததாக முஸ்லிம் விவாக, விவகாரத்துச் சட்டங்களில் திருத்தங்களை ஏற்படுத்துவதற்கு முற்படுகிறார்கள். இனவாதம் மேலோங்கும் போது முஸ்லிம் சட்டங்களை இலக்கு வைக்கின்றார்கள். முஸ்லிம் சட்டத்தை யார் மாற்றினாலும் நாங்கள் மாற்றிக்கொள்ளப்போவதில்லை. குர் - ஆனும், ஹதீஸும், ரியாவுமே எமது சட்டம் என்றால், நாம் அதற்குத்தான் மதிப்பளிப்போமே தவிர அரசாங்கத்தின் சட்டங்களைக் கருத்திற்கொள்ள மாட்டோம். அரசாங்கத்தின் சட்டம் என்பது அரசாங்கத்துக்கும் நாட்டுக்குமானது. நாங்கள் குர் -ஆனுக்கும் ஹதீஸுக்குமே மதிப்பளிப்போம். பல வருடகாலமாக நாம் அதனையே பின்பற்றி வருகின்றோம். தற்போது ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ தெரிவாகியிருக்கிறார் என்பதற்காக எம்மால் எமது சட்டங்களை மாற்றிக்கொள்ள முடியாது. - என்றார்.

## ஓ.எல். பரீட்சையில் ஆள்மாறாட்டம்; மற்றுமொருவர் பொலிஸாரால் கைது!

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரபரீட்சையில் ரஷ்ய மொழிபாடத்துக்கானபரீட்சையின் போது ஆள்மாறாட்டம்செய்ததாக இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அதற்கமைய இம்முறை இவ்வாறு ஆள்மாறாட்டம் செய்ததாக நான்கு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித்ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

இம்முறைசாதாரணதரப்பரீட்சையின் போது ஆள்மாறாட்டம் செய்தனர் என நான்கு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில் கடந்த புதன் கிழமையுடன் சாதாரணதரப் பரீட்சைகள் நிறைவுப் பெற்றுள்ளதுடன், அன்றைய தினம் இடம்பெற்ற ரஷ்ய மொழி பாடத்திற்கான பரீட்சையின் போது ஆள் மாறாட்டம் செய்ததாக இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பலாங்கொடை பரீட்சைநிலையமொன்றில் இளைஞர் ஒருவர் ஆள்மாறாட்டம் செய்து பரீட்சையில் தோற்றுவதற்கு வந்துள்ளதாகக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய பலாங்கொடை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். சம்பவம் தொடர்பில் 21 வயதுடைய இளைஞர் ஒருவரை கைது செய்துள்ள பொலிஸார் அவர் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், இம்முறை பரீட்சையின் போது இவ்வாறு ஆள்மாறாட்டம் செய்ததாக ஏற்கனவே முல்லைத்தீவு, வலஸ் முல்லமற்றும்இபலோகமஆகிய பகுதிகளிலும் மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்களுக்கு எதிராக குற்றவியல் மற்றும் பரீட்சை சார்ந்த சட்டவிதிகளுக்கமைய சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

## பிறந்தநாளில் கத்திக் குத்து இளம் குடும்பஸ்தர் சாவு!



கிளிநொச்சியில் கத்திக் குத்துக்கு இலக்காகி குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி, வட்டக்கச்சி வைத்தியாலைக்கு அண்மித்த பகுதியில் இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை மாலை ஐந்து மணியளவில் இடம்பெற்றது.

பிறந்தநாள் தினமான புதன் கிழமை வீட்டில் நின்ற குடும்பஸ்தரை வீட்டு வாசலில் வைத்து 18 வயது பூர்த்திடையாத இருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கினர் என பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்தவர், கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர், அதே பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான அருளம்பலம் துசியந்தன் (வயது 32) என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம்கையளிக்கப்படவுள்ளது.

இதேவேளை,இந்தக்கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன் மேலதிக விசாரணைகளை தர்ம்புரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பொறுப்புக்கூறலிலிருந்து ....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கவில்லை. இது அரசாங்கத்தின் பொறுப்பாகும். நான் இந்த அரசாங்கத்தையோ அல்லது அந்த அரசாங்கத்தையோ குறைகூற விரும்புபவன் அல்லன். அரசாங்கங்கள் வந்து போகும் ஆனாலும் நாட்டு மக்களுக்கு அரசாங்கம் பொறுப்பு கூறுகின்றமை அதன் கடமையாகும். ஆனாலும் இலங்கை அரசு மக்களுக்கு இந்தத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகளை நாம் அறியோம் என்றே கூறுகின்றது. எமக்கு முன் அறிவித்தல்கள் கிடைக்கப்பெற்றன. 6 தற்கொலை குண்டுதாரரில் 5 பேரின் பெயர் விவரங்களும் முன்னதாகவே தெரியப்படுத்தப்பட்டன. நாம் இது தொடர்பாக எதனையும் செய்யவில்லை. யாரோடும் இந்தத் தகவல்களை நாம் பகிரவில்லை. இதனை நாட்டு மக்களுக்கு எவ்வாறு அரசு தெரிவிக்க முடியும் ? இது மிகவும் பாரதூரமான ஒரு விடயமாகும். பேராயர், சர்வதேச விசாரணையைக் கோரும் அளவிற்கு இது பாரதூரமான விடயமாக உள்ளது. சர்வதேச விசாரணைகளை நாம் நாடக்கூடாது, எமது உள்நாட்டு விடயங்களை நாம் உள்நாட்டிலேயே தீர்க்க முடியும், எமது விடயங்களை நாமே கையாள முடியுமென தெரிவித்தவர்களே இன்று சர்வதேச விசாரணையை நாடுகின்றனர். ஏன் ? ஏனெனில் இந்த அரசாங்கம் அவர்களை ஏமாற்றியுள்ளது. அரசு அதன் மிக அடிப்படை கடமையாகிய பொறுப்புக் கூறலில் இருந்து தவறியுள்ளது. தனது நாட்டு மக்களுக்கு நீதியை வழங்குவது அரசாங்கத்தின் கடமையேயாகும், இது ஓர் அரசாங்கத்தின் மக்கள் மீதான பொறுப்பாக உள்ளது. அரசு இதில் தோல்வியுற்றுள்ளது. ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடர்கள் இடம்பெற்றுவரும் இந்தக் காலப்பகுதியிலே இதனை நான் தெரிவிக்கின்றேன், உலக நாடுகள் 11 வருடங்களாக இப்பொறுப்புக் கூறலை எம்மிடம் வேண்டுகிறது. 2009 இல் மே மாதம் 26 ஆம் திகதி, அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கண்டியில் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ - மூனுடனான கூட்டு அறிக்கையில் கையெழுத்திட்டு, இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுக்க ஒப்புக்கொண்டமையோடு இவை ஆரம்பமாகின. இன்று வரை 11 வருடங்களாக எதுவும் நடைபெறவில்லை. எனவேதான் இப்பிரச்சினைகள் நீங்காது, எவ்வளவு தான் நாம் இது உள்நாட்டு விடயமென்றும் எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக்கொள்வோம் என்று குரலை உயர்த்தினாலும் நீங்கள் எதனையும் தீர்க்கவில்லை, 11 வருடங்களாக எதனையும்செயற்படுத்தவில்லை. கத்தோலிக்க திருச்சபை 2 வருட காலத்திற்குள் பொறுமை இழந்துள்ளது. நாம் 11 வருடங்களாக அல்லது அதற்கும் அதிகமாக பொறுத்திருக்கின்றோம். இவ்வாறான சூழ்நிலையில் நாம் சர்வதேச விசாரணையை நாடுகின்றமை எவ்வாறு தவறென்று கூறமுடியும்?

அரசாங்கம் மக்களுக்கு பொறுப்புக்கூறலில் இருந்து தோல்வியுறும் போதே இவ்வாறான சர்வதேச விசாரணையை நாட வேண்டி ஏற்படும். இந்த அவையில் 'சர்வதேச விசாரணைகள் தேவையில்லை' என்ற கூறும் இருதரப்பினரையும் நான் கேள்வி கேட்க இது சாதகமான தருணமாகும், இந்தத் தாக்குதல் விடயத்தில் சர்வதேச விசாரணையைக் கோரி நிற்கின்றீர்கள், உங்கள் மதத் தலைவர் நியாயமான காரணங்களுக்காக அதனை கோருகிறார், நானும் அதனை ஆதரிக்கிறேன். அரசாங்கத்திற்கு இதனை செய்ய முடியாதானால் இவ்வாறான மனித உரிமை மீறல்களுக்காக சர்வதேசத்திடமே செல்ல நேரிடும். எனவே பேராயர் சர்வதேச விசாரணையைக் கோருவதை நான் ஆதரிக்கிறேன் ஏனெனில் அரசாங்கம் மக்களை ஏமாற்றியுள்ளது. எனினும் அவர் அவ்வாறு இத்தாக்குதல் விடயத்தில் சர்வதேச விசாரணையைக் கோரா முடியுமானால் 2009 இன் இறுதி யுத்த காலகட்டத்தில் இடம்பெற்ற யுத்தக்குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணையினை கோருவதற்கு எமக்கு நியாயமான காரணங்கள் அதிகமாகவே உள்ளன.

இங்கே,'நாம் வெல்வோம்', 'எம்மால் முடியும்', 'எம்மை யாரும் இங்கு , அங்கு என அழைக்க முடியாது' போன்ற பல வெற்றி பேச்சுக்களை நாம் கேட்கின்றோம். இவை முட்டாள்தனமான பேச்சுக்களாகும் நாம் பௌதீக ரீதியில் ஒரு தீவாக இருக்கலாம் ஆனாலும் எந்தவொரு நாடும் தனித்து தீவாக இயங்க முடியாது. நாம் ஐக்கிய நாடுகளின் பொறுப்பு வாய்ந்த அங்கத்துவம் கொண்ட முதல் சில நாடுகளுள் ஒன்றாகும். எமக்கு கடமைகளும் பொறுப்புக்களும் உள்ளன, நாம் ஐக்கிய நாடுகள் போன்ற அமைப்புகளில் அங்கத்துவம் வகிப்பதன் நன்மைகளை மாத்திரம் அனுபவிக்க முடியாது. எமக்கு பிரதானமான கடமைகளும் உள்ளன. நாம் இறையாண்மை உள்ள நாடு என கூறுவோமாயின் அந்த இறையாண்மை மக்களுக்கும் உரித்துடைய வகையில் அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும்.

அரசாங்க அதிகாரிகளே இந்த இறையாண்மையை மெய்ப்படவைக்க வேண்டும். அவ்வாறு செய்யாதவிடத்து 'நீதி' உலகெங்கும் குரலெழுப்பும் இதனை இந்த அவையின் இரு தரப்பினரும் புரிந்து கொள்ளல் வேண்டும். மன்னிப்பு கிறிஸ்தவத்தின் பண்பாகும் ஆனாலும் அது நீதியின் அடிப்படையிலேயே அமையும், ஏற்கனவே நான் சொன்னமை போல இவை இரண்டும் ஒருமித்து செல்பவையாக இருக்கும். உலக நாடுகள் இன்று இலங்கையை தனது மக்களுக்கு நீதியை வழங்குவதில் தோல்வியுற்ற ஒரு நாடாகவே காண்கிறது. எனவே இது ஒரு தோல்வியடைந்த அரசாக காணப்படுகின்றது. - என்றார்.

# வீட்டுத் திட்டங்களுக்கான நிலுவையை வழங்குக!

## பிரதமரிடம் செல்வம் எம்.பி. கோரிக்கை



வடக்கில், ஆரம்பிக்கப்பட்டு முடிவுறுத் தப்படாதவீட்டுத்திட்டநிலுவைத்தொகையை வழங்குமாறு வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் பிரதமருக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு நேற்று (வியாழக்கிழமை) அனுப்பி வைத் துள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்தக் கடிதத்தில் –

முன்னாள் வீடமைப்பு மற்றும் கலா சார அலுவல்கள் அமைச்சர் சஜித் பிரேம தாஸவின் காலப்பகுதியில் மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களிலும் தேசிய வீட மைப்பு அபிவிருத்தி அதிகாரசபை ஊடாக ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத் திட்டம் இற்றை வரைக்கும் பூர்த்தி செய்யப்படவில்லை.

அத்துடன், பயனாளிகளுக்கான மீத முள்ள கொடுப்பனவும் வழங்கப்பட வில்லை. ஏழை மக்கள் தங்கள் சொத்துக் களையும் கையில் வைத்திருந்த சிறிய தொகைப் பணத்தையும் வைத்துத்தான் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட நிதி கிடைக் கும்என்றஎதிர்பார்ப்புடன்இந்தவேலையை ஆரம்பித்தார்கள்.

ஆனால், ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத் திட்ட வேலை நிறைவுக்கு வரவில்லை. ஏழை மக்கள் கடந்த உள்நாட்டுப் போரில் அனைத்தையும் இழந்தவர்கள். இப்பொ ழுது மிகவும் அவதிப்படுகிறார்கள்.


குழந்தைகள், பெரியவர்கள் மற்றும் சமூகத்தின் பல நிலைகளிலும் வாழும் இந்த மக்கள் தங்களுக்கென ஒரு நிரந் தரவீடு இன்மையால் இன்னும் சிறிய குடிசைகளில் தங்களது வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள். வீட்டு வசதி என்பது ஒருநாட்டுக் குடிமகனின் அடிப்படைத் தேவை.

ஆனால், இந்த மக்கள் அதைப்பார்க்க வும் அனுபவிக்கவும் கூட முடியாத நிலை யில் இருக்கிறார்கள். அவர்கள் உடல் ரீதி யாகவும் மன ரீதியாகவும் பாதிக்கப்பட்ட வர்கள்.

எனவே, இந்த மக்களுக்கு சுதந்திர மாக வாழவும் பாதிப்புக்களில் இருந்து விடுபடவும் ஒரு வீடு தேவை. இதனால், பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வீட்டுத்திட்ட குறைகளை நிறைவுக்குக் கொண்டுவரு வதற்கும் அவர்களின் அன்றாட வாழ்வை சுமுகமாக நகர்த்திச் செல்வதற்கும் வழி வகுக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள் கிறேன். – என அவர் கோரியுள்ளார்.

# மியன்மாரின் இராணுவ ஆட்சியை இலங்கை மறைமுகமாக ஏற்கிறதா?

## அந்த நாட்டு மக்கள் எதிர்ப்பு



மியன்மார் இராணுவ அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சர் வுன்னா மாவுங் லுவினை பிம்ஸ்ரெக் மாநாட்டில் பங்கேற்குமாறு அழைப்பு விடுத்து வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்தன அனுப்பியுள்ள கடிதத்திற்கு மியன்மார் நாட்டு மக்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

இதனூடாக, இலங்கை, மறைமுகமான முறையில் மியன் மாரின் இராணுவ ஆட்சியை ஏற்றுக்கொண்டுள்ளதாக, சமூக வலைத்தளங்களில் மியன்மார் பிரஜைகள் தமது எதிர்ப்பினை தெரிவித்துள்ளனர்.

'ஷேம் ஒன் யு சிறிலங்கா' என்ற 'ஹெஷ் டாக்' ஊடாக டுவிட்டரில் அவர்கள் தொடர்ச்சியாக தங்களது எதிர்ப்பை பதிவு செய்துள்ளனர்.

பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப் புக்கான வங்காள விரிகுடா கூட்டமைப்பு என்ற பிம்ஸ்ரெக் அமைப்பின் தற்போதைய தலைமைத்துவத்தை இலங்கை வகிக்கின்றது.

பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மியன்மார், நேபாளம், இலங்கை மற்றும் தாய்லாந்து முதலான நாடுகள் இந்த கூட் டமைப்பில் அங்கம் வகிக்கின்றன.

இந்தக் கூட்டமைப்பின் 17ஆவது அமைச்சர்கள் மாநாடு, எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி இணையவழி மெய் நிகர் மாநாடாக கொழும்பில் இடம்பெறவுள்ளது.

இந்த மாநாட்டில் பங்கேற்குமாறு, வெளிவிவகார அமைச் சர் தினேஷ் குணவர்தனவின் கையொப்பத்துடன், மியன்மார் இராணுவ அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சரான வுன்னா மாவுங்லுவினுக்கு அழைப்பு விடுத்து, கடந்த 2ஆம் திகதி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே இவ்வாறான கடிதமொன்றை அனுப் பியதன் மூலம், மியன்மார் ஆட்சியை இலங்கை ஏற்றுக் கொண்டுள்ளதாக மியன்மார் பிரஜைகள் தங்களது டுவிட்டர் மற்றும் பேஸ்புக் பதிவுகளில் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, பிம்ஸ்ரெக் அமைச்சர்கள் மாநாட்டில் பங்கேற்பதற்காக மியன்மார் வெளிவிவகார அமைச்சருக்கு விடுக்கப்பட்ட அழைப்பு தொடர்பில் சமூக வலைத்தளங்களில் வெளியாகும் கருத்துகள் தொடர்பாக வெளிவிவகார அமைச்சு கடந்த புதன்கிழமை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் –

பிம்ஸ்ரெக் மாநாட்டுக்கு தலைமை தாங்கும் இலங்கை, இந்த வருட இறுதியில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்பட்டுள்ள 5ஆவது உச்சிமாநாட்டின் ஆவணங்களை இறுதிப்படுத்தும் நோக்குடன், அது சம்பந்தமான கலந்துரையாடல்களில் பங் கேற்பதற்காகவே மியன்மார் உள்ளிட்ட அனைத்து உறுப்பு நாடுகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதி, மியன்மார் தலைவர் ஆன் ஷாங் சூகியின் ஆட்சியை கவிழ்த்து, ஆட்சியைக் கைப் பற்றிய இராணுவத்தினருக்கு எதிராக அந்த நாட்டில் பாரிய எதிர்ப்புகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளில் பொலிஸாருக்கும் போராட் டக்காரர்களுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் இதுவரை யில் 50 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர் எனத் தகவல்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 70 லட்சம் ரூபா பெறுமதியான காரை திருடிய 23 வயது இளைஞர் கைது!

விபஸ்ஸனா பாவனா மத்திய நிலையத்தின் விகாராதிபதி உடு தும்பர காஷ்யப தேரரின் சொகுசு காரை திருடிய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என தங்கம பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய்கிழமை மாலை 7.15 மணியளவில் தலவத்து கொட இலங்கை வங்கிக்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த போதே மேற்படி கார் திருடப்பட்டதாகவும் , எனினும் திருடப்பட்ட சுமார் அரை மணித்தியாலத்துக்குள் அதனை மீட்டு சந்தேகநபர் கைது செய் யப்பட்டுள்ளார் எனவும் தலங்கம பொலிஸார் மேலும் தெரிவித்த னர்.

காரில் பொருத்தப்பட்டிருந்த ஜி.பி.எஸ். தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கலல்கொட கிராமோதய மாவத்தையில் அது மீட்கப் பட்டுள்ளது. காரை பொலிஸார் கைப்பற்றிய போது அதில் இலக்க தகடு அகற்றப்பட்டிருந்ததோடு , ஜி.பி.எஸ். கருவியை அகற்றுவ தற்கு பதிலாக வாகனத்தின் பிரிதொரு பகுதியும் அகற்றப்பட்டிருந் ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு திருடப்பட்ட காரின் பெறுமதி 70 லட்சம் ரூபாவாகும். இதன் போது கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 23 வயதுடைய கலல் கொட பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். தலங்கம பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின் றனர்.

# இராணுவ ட்ரக் மோதி பொலிஸ் ஒருவர் சாவு!

ஹபரண – பொலன்னறுவை வீதியில் இராணுவ ட்ரக் மோதி பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயி ரிழந்துள்ளார் என மின்னேரியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

மின்னேரியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹபரண – பொலன்னறுவை வீதியில் கடந்த செவ்வாய்க் கிழமை மாலை பொலிஸ் உத்தியோகத்தர் பயணித்த மோட்டார் சைக்கிள் இராணுவ ட்ரக்குடன் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது படுகாயமடைந்த பொலிஸ் உத்தி யோகத்தர் பொலன்னறுவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

மனினேரியா பிரதேசதச்சில் ஹசரெஸ்கொட்டுவ – கல்வோயா சந்தியிலுள்ள பொலிஸ் நிலையத்தில் பணிபுரிந்து வந்த 53 வயதுடைய உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என பொலி ஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் இராணுவ ட்ரக் வாகனத் தின் சாரதியை கைது செய்துள்ள மின்னேரியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெ டுத்து வருகின்றனர்.

# மனித உரிமைகளுக்காக முன்னிற்பவர்கள் துன்புறுத்தப்படக்கூடாது என வலியுறுத்து!

கொழும்பு, மார்ச் 12

மனித உரிமைகளுக்காக முன்னிற் கும் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா போன்றோர் துன்புறுத்தப்படக்கூடாது என கூட்டாக கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

நெதர்லாந்து, ஜேர்மனி, இங்கி லாந்து, சுவீடன், எஸ்டோனியா, லித்து வேனியா, பின்லாந்து மற்றும் லக்சம் பர்க் ஆகிய நாடுகளின் மனித உரிமை கள் தூதுவர்களால் இவ்வாறு கூட்டாக கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகளுக்காக முன்னிற் கும் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ் புல்லா போன்றோரை துன்புறுத்தக் கூடாது என்பதுடன், அவர்களைப் பாது காக்க வேண்டும் எனவும் குறித்த நாடு களின் தூதுவர்கள் கூட்டறிக்கையூடாக வலியுறுத்தியுள்ளனர்.

திறமை வாய்ந்த சட்டத்தரணியான ஹிஜாஸ் ஹிஸ்புல்லா 2020 ஏப்ரல் மாதம் முதல் விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளமை தொடர்பில் தாம் மிகவும் கவலையடைகிறார் என மனித உரிமை களுக்கான தூதுவர்கள் குறிப்பிட்டுள் ளனர்.

மனித உரிமைகளுக்காக போராடுப வர்களை, பாதுகாப்பதும் ஊக்குவிப் பதும் எந்தவொரு நாட்டினதும் அவசி யம் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ள னர்.

அவ்வாறானோரை பாதுகாப்பது அனைத்து அரசாங்கங்ளின் பொறுப் பாகும் எனவும் அவர்களை துன்புறுத்த லாகாது எனவும் இதன்போது வலியுறுத் தப்பட்டுள்ளது.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

## வீட்டுத்தோட்டத்தில் வளர்க்க கூடிய மூலிகைகள்

துளசி
தூதுவளை
கற்றாழை
கற்பூரவள்ளி
முசுமுசுட்டை
மணத்தக்காளி
புதினா
பிரண்டை
அகத்தி
கறிவேப்பிலை
வேம்பு
மஞ்சள்
வெற்றிலை
வல்லாரை
இஞ்சி
பொன்னாங்கன்னி



ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

காலைக்கதிர் Kalaikkathir

## இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்து!

# உண்ணாவிரதப் போராட்டத்தில் கிழக்கில் முஸ்லிம்களும் இணைவு

**'சர்வதேசமே! இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்து!!' என்று வலியுறுத்தி அம்பாறை மாவட்டம், பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய முன்றலில் சுழற்சி முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் முஸ்லிம் மக்களும் இணைந்துள்ளனர்.**

**கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமான இந்தப் போராட்டம் 7ஆவது நாளாக இன்றும் தொடர்கின்றது.**



இந்தப் போராட்டத்தில் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான நீதிக்கான பேரணியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளரும் கல்முனை இளைஞர் சேனையின் முன்னாள் தலைவருமான தாமோதரம் பிரதீபன், நாவிதன் வெளி பிரதேச சபை உறுப்பினர் என்.தர்சினி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான அழகக்கோன் விஜயரட்ணம், பொன் செல்வநாயகம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இளைஞர் தலைவர் துஷானந்தன், ஜோசப் பரராசசிங்கம் மக்கள் அமைப்பின் தலைவி கந்தையா கலைவாணி உள்ளிட்ட பலரும் பங்கேற்றுள்ளனர். இவர்களுடன் முஸ்லிம் மக்களும் இன்று இணைந்துகொண்டனர்.

சுழற்சி முறையிலான இந்தப் போராட்டத்தை பல்வேறு தடைகளை உடைத்து முன்னெடுத்து வருகின்றோம். அரசு பல தவறுகளைச் செய்துள்ளது. அதற்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணையைக் கோரியே இந்தப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றோம். இலங்கை மீது சர்வதேச குற்றவியல் விசாரணையைக் கோரி லண்டனில் வசித்து வரும் பெண் அம்பிகை செல்வகுமார் ஆரம்பித்த உண்ணாவிரதப் போராட்டம் இன்று 13 ஆவது நாளாகவும் தொடர்கின்றது. அவருக்கு ஆதரவு வழங்கியும் சுழற்சி முறையிலான எமது போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம் - என்று அம்பாறை உண்ணாவிரதப் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

## உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்:

# சர்வதேச குழுவை இலங்கைக்கு அழைத்து விசாரிக்க வேண்டும்!

### சஜித் அணி வலியுறுத்து



சர்வதேச சுயாதீன விசாரணைக்குழுவொன்றை இலங்கைக்கு அழைத்துவந்து, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார வலியுறுத்தினார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக் குழுவின் விசாரணைஅறிக்கை தொடர்பில் நாடாளுமன் றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தின் பின்னணி என்ன, பிரதான சூத்திரதாரி யார் என்பது தொடர்பில் அறிக்கையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. தாக்குதலை தடுத்து நிறுத்துவதற்கு தவறியவர்கள் தொடர்பிலேயே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சஹ்ரானைக் கைது செய்வதற்குரி.ஐ.டியின்பிரதிப்பொலிஸ்மா அதிபராக இருந்த நாலக சில்வா தயாரானார். அப்போது அவருக்கு எதிராக திடீரென குற்றச்சாட்டு வந்தது. அவர் கைது செய்யப்பட்டார். அதன்பின்னர் ஷானி அபே சேகரவும் முடக்கப்பட்டார். எனவே, இதன் பின்னணியில் ஏதோ மர்மம் உள் ளது. விசாரணையை மறைப்பதற்கு முயற்சிக்கப்படுகின்றது. சாரா எங்கே? அவரை உடன் நாட்டுக்குக் கொண்டு வரவேண்டும்.

ஐ.எஸ். அமைப்புக்கு 2015 இல் ஒருவரே சென்றிருந்தார். சம்பவத்தின் பின்னணியில் ஐ.எஸ். அமைப்பு இருக்காது. இந்தியாவில் இருந்து ஒருவர் இயக்கி இருக்கக்கூடும் என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் உள்ளது.

ஹக்கீம், ரிஷாத்தை விமர்சிப்பவர்கள், அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக அவர்களின் கட்சி உறுப்பினர்களின் வாக்குகளைப் பெறுகின்றனர். இதன்மூலம் அரசின் இரட்டை நிலைப் பாடு அம்பலமாகின்றது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை வைத்து இந்த அரசே நன்மை அடைந்தது. தாக்குதலுக்கு அவர்களும் பொறுப்புக் கூற வேண்டும். உண்மையை மூடி மறைப்பதற்கு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை அனுமதிக்க முடியாது. எனவே, சுயாதீன சர்வதேச குழுவை அழைத்துவந்து இது தொடர்பில் விசா ரணை நடத்துமாறு கோருகின்றோம் - என்றார்.

# சஜித்தின் ஆட்சி அமையமாட்டாது

### பொன்சேகாவின் கருத்துக்கு இராஜாங்க அமைச்சர் பதில்

சரத் பொன்சேகா கூறுவதுபோல் சஜித் பிரேமதாஸ தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சி ஒருபோதும் அமையாது. எமது ஆட்சியில் ஈஸ்டர் தாக்குதல் குற்றவாளிகள் நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள்

- இவ்வாறு இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரணைநடத்தியஜனாதிபதிஆணைக்குழுவின் இறுதி விசாரணை அறிக்கை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றக் தெரிவுக்குழுதான் கண் துடைப்பு நாடகம். ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை என்பது இறுதியானது அல்ல. அதில் நல்ல விடயங்களும் உள்ளன. ஏற்றுக்கொள்ள முடியாத சில விடயங்களும் உள்ளன. எது எப்படி இருந்தாலும் குற்றவாளிகள் நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள் - என்றார்.

# 1,000 ரூபா வழங்காவிட்டால் 6 மாதம் சிறைத் தண்டனை

### தொழில் திணைக்களம் எச்சரிக்கை

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா நாளாந்த சம்பளத்தை வழங்காத தோட்ட நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆயிரம் ரூபா சம்பளத்தை வழங்காத தோட்ட நிறுவனங்களின் அதிகாரிகளுக்கு, அபராதம் மற்றும் 6 மாத சிறைத்தண்டனை வழங்கப்படும் என்று தொழில் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்திர கீர்த்தி தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 5ஆம் திகதி தொடக்கம் செல்லுபடியாகும் வகையில் பெருந் தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கான விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச நாளாந்த சம்பளமாக 900 ரூபாவும், வரவு - செலவுத்திட்ட சலுகை கொடுப்பனவாக 100 ரூபாவும் வழங்கப்படவுள்ளன என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் உண்மை வெளிச்சத்துக்கு வரும்

### பொன்சேகா எம்.பி. தெரிவிப்பு

எதிர்காலத்தில் அமையவுள்ள ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியின் கீழ் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்தொடர்பில்அனைத்து விடயங்களும்கண்டறியப்பட்டு, கத்தோலிக்க மக்களுக்கு நீதி பெற்றுக்கொடுக்கப்படும்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக் குழுவின் இறுதி விசாரணை அறிக்கை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி சஹ்ரான் அல்ல என்பது அனைவருக்கும் தெரியும். ஆனாலும், அவர்தான் பிர தானி எனக் காண்பிப்பதற்கு சிலர் முயற்சிக்கின்றனர். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்குக் கூட தற்கொலை தாக்குதல் போராளி ஒருவரை உருவாக்குவதற்குப் பலவருடங்கள்எடுத்தன. எனவே, சஹ்ரான் திடீரென உருவான நபர் கிடையாது. 2005 காலப் பகுதியில் இருந்து அவர் கருத்தியலை விதைத்து வந்துள்ளார். 2014 வரை அவருக்கு சம் பளம் வழங்கப்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது. இது தொடர்பில் உரிய தகவல் வெளியிடப்பட வேண்டும்.

ஜனாதிபதி ஆணைக்குழு என்பது நாடகம். எனவே, நாடகம் முடியும்போது நிச்சயம் உண்மை தெரியவரும்.

எமது ஆட்சியின்கீழ் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் அனைத்து விடயங்களும் கண்டறியப்படும். கத்தோலிக்க மக்களுக்கு நீதி நிவாரணம் பெற்றுக்கொடுக்கப்படும். அப்போது இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் அனைவருக்கும் அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும் - என்றார்.

# சஹ்ரானை இயக்கியவர் மொஹமட் நௌபரே!

## அமைச்சர் சரத் வீரசேகர நாடாளுமன்றில் தகவல்



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்கு தலைமை வகித்த சஹ்ரானை, மொஹமட் நௌப்பர் என்பவரே கருத்தியல் ரீதியில் இயக்கியுள்ளார் என்பது விசாரணை மூலம் கண்டறியப்பட்டுள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

அத்துடன், ஈஸ்டர் தாக்குதலை தடுப்பதற்கு இருந்த 9 சந்தர்ப்பங்களை கடந்த அரசு தவறவிட்டுள்ளது எனவும் 11 அடிப்படைவாத அமைப்புகள் விரைவில் தடைசெய்யப்படும் எனவும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை விசேட அறிவிப்பொன்றை விடுத்து உரையாற்றுகையிலேயே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

'21– 4 தாக்குதல் தொடர்பில் 676 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 200 பேர் சிறையில் இருக்கின்றனர். 66 பேர் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுவருகின்றனர். 608 பேருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு பிணை வழங்கப்பட்டிருந்தாலும் அவர்கள் தொடர்பிலும் விசாரணைகள் தொடர்கின்றன.

21 – 4 தாக்குதலுக்கு முன்னர் பல சம்பவங்கள் இடம்பெற்றன. அவை தொடர்பாக உரிய கவனம் செலுத்தி, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால் தாக்குதலைத் தடுத்திருக்கலாம். ஆனால் கடந்த ஆட்சியின் போது புலனாய்வுத்துறை பலவீனப்படுத்தப்பட்டது. தேசிய பாதுகாப்புக்கு முக்கியத்துவம் வழங்கப்படவில்லை.

குறிப்பாக 2018 பெப்ரவரி 6 ஆம் திகதி நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் உறுப்பினர் அப்துல் பாஷாட்டின் வீடு மீது குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. சம்பவம் நடைபெற்று 6 நாள்களின் பின்னர் காத்தான்குடியிலுள்ள அந்தக் கட்சியின் அலுவலகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

6 மாதங்களுக்கு பிறகு மட்டக்களப்பு பாலமுனை பகுதியில் வெடிபொருள் பரிசோதனையின்போது சஹ்ரானின் சகோதரர் ரில்வான் படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் நடைபெற்று இரண்டரை மாதங்களுக்கு பின்னர் பயிற்சி முகாம்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டாலும், விசாரணைகள் நடைபெறவில்லை.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் வவுணதீவில் பொலிஸ் அதிகாரிகள் கொல்லப்பட்டனர். இந்தக் கொலைச்சம்பவம் இடம்பெற்று ஒரு மாதத்துக்கு பின்னர் மாவன்னல்லை பகுதியில் புத்தர்சிலை சேதமாக்கப்பட்டது.

மூன்று வாரங்களுக்கு பிறகு வனாத்தவில்லுப் பகுதியில் வெடிபொருள்கள் மீட்கப்பட்டன. இந்தச் சம்பவம் இடம்பெற்று 2 மாதங்களுக்கு பிறகு தல்ஷீம என்பவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

21– 4 தாக்குதலுக்கு 5 நாள்களுக்கு முன்னர் காலங்குடா பகுதியில் மோட்டார் சைக்கிளை வெடிக்க வைத்தனர். இவை தொடர்பில் உரிய வகையில் விசாரணை நடத்தியிருந்தால் தாக்குதலைத் தடுத்திருக்கக் கூடும். 9 சந்தர்ப்பங்களைக் கடந்த அரசு நழுவவிட்டுள்ளது.

### சஹ்ரானின் மகளிர் படையணி

எமது அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் புலனாய்வுத் துறை பலப்படுத்தப்பட்டது. தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. 21– 4 தாக்குதலுடன் நேரடியாக – மறைமுகமாகத் தொடர்புபட்ட 99 பேர் இலங்கையில் கைது செய்யப்பட்டனர். அத்துடன், வெளிநாடுகளில் இருந்த இந்நாட்டு பிரஜைகள் 35 பேரும் கைது செய்யப்பட்டனர்.

வெளிநாட்டு புலனாய்வு அமைப்புகளுடன் இணைந்து 5 நாடுகளில் இருந்து 54 பேர் கைது செய்யப்பட்டனர். 50 பேர் இதுவரை இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளனர். ஏனைய நால்வர் அந்நாடுகளில் வழக்கு விசாரணை முடிவடைந்த பின்னர் அழைத்துவரப்படுவார்கள்.

சஹ்ரானிடம் பயிற்சி பெற்ற பெண் பிரிவு தொடர்பில் 2020 இல் புலனாய்வு பிரிவுக்கு தகவல் கிடைத்தது. 17 பேர் தற்கொலைத் தாக்குதலுக்கான உறுதிமொழியை வழங்கியுள்ளனர். 17 பெண்களில் ஐவர் உயிரிழந்துள்ளனர். மூவர் சிறைவைக்கப்பட்டுள்ளனர். எழுவர் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர். ஏனைய இருவரைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

சஹ்ரானின் வலையமைப்புக்கு அப்பால் இலங்கையில் செயற்படும் ஏனைய அடிப்படைவாதக் குழுக்களையும் ஒடுக்கவும் அதன் பிரதான உறுப்பினர்களைக் கைதுசெய்யவும் புலனாய்வுத்துறையும் பயங்கரவாத ஒழிப்பு பிரிவும் செயற்பட்டு வருகிறன.

வன் உன்மா, ஸ்புத் தாஹிர், முஜர்தீன் ஹல்ஹா, சுப்பர் முஸ்லிம் உள்ளிட்ட குழுக்களால் இஸ்லாமிய அரசைக் கட்டியெழுப்ப சஹ்ரான், மதவாச்சி, வன்னி, தியவெல்ல அம்பாந்தோட்டை, நுவரெலியா, ஹிங்குல உள்ளிட்ட பகுதிகளில் நடத்திச்சென்றுள்ள 8 பயிற்சி முகாம்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த முகாம்களுடன் தொடர்புடைய வர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

2018 ஆம் ஆண்டு முதல் சஹ்ரானின் அனைத்து தேவைகளுக்கு நிதியையும் வாகனங்களையும் தெமட்டகொட இப்ராஹிம் சகோதரர்களே வழங்கியுள்ளனர். இவர்கள் 2018ஆம் ஆண்டுமுதல் தாக்குதல் வரையான காலப்பகுதிவரை 5 கோடி ரூபாவை வழங்கியுள்ளனர்.

2014 ஆம் ஆண்டு இஸ்லாமிய அரசுக்கான பிரகடனத்தை ஐ.எஸ். அமைப்பின் தலைவர் அபுபக்கர் அல் – பாக்தாத் வெளியிட்டார். சிரியா, ஈராக் வந்து, இஸ்லாமிய அரசுக்காக சமராடுமாறு அழைப்பும் விடுத்திருந்தார். ஐ.எஸ். அமைப்பின் தலைவரின் இந்த அறிவிப்பையடுத்து 2015 ஜனவரி மாதமளவில் இந்நாட்டிலிருந்து சுமார் 37 பேர் சிரியா சென்று, ஐ.எஸ். அமைப்புடன் இணைந்து செயற்பட்டனர்.

சஹ்ரானும் இஸ்லாமிய அரசு கோட்பாடுக்காக செயற்பட்டு, மத அடிப்படைவாதியாக மாறினார். 2017ஆம் ஆண்டு ஆரம்பத்தில் மத அடிப்படைவாதத்திலிருந்து வன்முறையை நோக்கி சஹ்ரான் பயணித்துள்ளார். 2017ஆம் ஆண்டு மார்ச் 10 ஆம் திகதி காத்தான்குடியில் மாற்றுக்கருத்துடையவர்களை தாக்கியுள்ளமை சஹ்ரானின் முதலாவது வன்முறைச் சம்பவமாகும்.

அதேவேளை நீண்டகாலமாக கட்டாரில் இருந்து, தற்போது கைதாகியிருக்கும் மொஹமட் இப்ராஹிம், மொஹமட் நௌப்பர் என்பவர், 2016 ஆம் ஆண்டிலிருந்து சஹ்ரானுடன் நெருங்கிய தொடர்பை பேணிவந்துள்ளார். ஐ.எஸ். தலைவரின் கருத்தியலுடன் சஹ்ரானை இவரே தொடர்புபடுத்தியுள்ளார். சஹ்ரானுடன் தொடர்பை ஏற்படுத்தி, தாக்குதல்வரை சஹ்ரானை கருத்தியல் ரீதியில் அவரே வழிநடத்தியுள்ளார். சி.ஐ.டி. மற்றும் ரி.ஐ.டி. ஊடாக முன்னெடுக்கப்பட்டுவரும் விசாரணையில் இது உறுதியாகின்றது. இதன்படி 21 – 4 தாக்குதலின் பின்னணியில் இருந்த பிரதான அடிப்படைவாதி , சஹ்ரானை வழிநடத்தியவராக நௌப்பர் கருதப்படுகின்றார்.

தாக்குதலுக்கு முன்னர் சஹ்ரான் உள்ளிட்ட குழுவினர், ஐ.எஸ். அமைப்பின் அபுபக்கர் அல் – பாக்தாத்தான் தமது தலைவர் என உறுதியெடுத்தனர். இஸ்லாம் அரசுக்காகவே இத்தாக்குதல் என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர்.

மதரஸாக்களில் உரிய கல்வி முறைமைகள் இல்லை. 5 வயது முதல் 10 வயதுவரை அரச கல்வி கொள்கையின் கீழ் மாணவர்களுக்கு கல்வியை பெற்றுக்கொடுக்க வேண்டுமென அவதானம் செலுத்தியுள்ளோம். இந்த கொள்கையின் பிரகாரம் செயற்படாத பாடசாலைகள் அனைத்தும் தடைசெய்யப்படும். ஏனைய மதரஸா பாடசாலைகளை கல்வி அமைச்சுடன் இணைத்து தரநிர்ணயம் மேற்கொள்ள நடவடிக்கையெடுக்கப்படும்.

சமகால அரசாங்கம் தாக்குதல்களுடன் தொடர்புடைய மற்றும் அடிப்படைவாத செயற்பாடுகளில் ஈடுபடும் 11 அமைப்புகளை அடையாளம் கண்டுள்ளதுடன் அவற்றை எதிர்காலத்தில் தடைசெய்ய நடவடிக்கையெடுக்கப்படும்.

அடிப்படைவாதச் செயற்பாடுகளுக்கு செல்பவர்கள் தொடர்பில் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்ததும் அவர்களை உடனடியாக கைதுசெய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களை புனர்வாழ்வுக்கு அனுப்பவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்த தாக்குதல்களுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புடைய அனைவருக்கும் அமைப்புகளுக்கும் எதிராக உச்சபட்ச தண்டனையை பெற்றுக்கொடுக்க நடவடிக்கையெடுக்கப்படும்.

அதேபோன்று உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகிவிட்டன. பர்தாருக்கும் தடைவிதிக்கப்படும்.' – என்றார்.

# பொறுப்புக்கூறவேண்டியவர்களே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றனர்!

## இராஜாங்க அமைச்சர் நாலக கொடஹேவா தெரிவிப்பு

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்களே தற்போது அது தொடர்பில் கருத்துக்களைத் தெரிவிப்பதோடு, போராட்டத்திலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர் என்று நகர அபிவிருத்தி, கரையோரப் பாதுகாப்பு, கழிவுப் பொருள் அகற்றுகை, சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.

தெரணியகல பிரதேசத்தில் கடந்த திங்களன்று நடைபெற்ற வீடுகளை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டும்விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

நல்லாட்சி அரசாங்கத்தில் அபிவிருத்தி திட்டங்கள் பலவும் வீழ்ச்சியடைந்திருந்தன. ஒரு புறம் பொருளாதாரம் , மறுபுறம் மக்களின் வாழ்வாதாரம் என்பன பாரியளவில் பாதிக்கப்பட்டிருந்தன. ஆனால் தற்போது அனைத்தும் மாற்றமடைந்துள்ளன.

கடந்த அரசாங்கத்துக்கு பெருந்



தோட்டத் தொழிலாளர்களுக்கு 1, 000 ரூபா நாளாந்த சம்பளத்தைக் கூட பெற்றுக் கொடுக்க முடியாமல் போனது. எனினும் தற்போதைய அரசாங்கம் அதனைப் பெற்றுக் கொடுத்துள்ளது.

தம்மைப் பற்றி சரியாக புரிந்து கொள்ளாதவர்களே அரசாங்கத்தை விமர்சித்துக் கொண்டிருக்கிறார்கள். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சந்தேகநபர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆனால் அதற்கு பொறுப்பு கூற வேண்டியவர்களே தற்போது தாக்குதல்கள் தொடர்பில் கேள்வியெழுப்பிக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறான சிலர் கறுப்பு ஞாயிறு போராட்டத்திலும் கலந்து கொண்டிருந்தனர்.

நாம் எந்த சந்தர்ப்பத்திலும் நீதித் துறைக்கு அழுத்தம் பிரயோகிக்கவில்லை. நீதிமன்றத்திற்கும் நீதிக்கும் முழுமையான சுதந்திரம் கிடைத்துள்ளது. சுதந்திரத்தைப் போலவே சுயாதீனத்தன்மையுடன் செயற்படுவதற்கான வாய்ப்புக்களும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் குற்றவாளிகள் இனங்காணப்பட்டு தண்டனைக்கு உட்படுத்த முடியும்.

எமது அரசாங்கம் சட்டத்தை மாற்றியமைக்கும் அரசாங்கமல்ல. பலவீனமான ஆட்சியிலிருந்து நாட்டை இந்த அரசாங்கம் மீட்டெடுத்துள்ளது. இது மக்களின் அரசாங்கமாகும். அதன் காரணமாகவே ஜனாதிபதி ஒவ்வொரு கிராமங்களுக்கும் சென்று மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து தீர்வை வழங்கிக் கொண்டிருக்கிறார். – என்றார்.

# 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசி செலுத்த முன்னுரிமை!



நாட்டில் நாளை சனிக்கிழமை முதல் 60 வயதுக்கு மேற்பட்டோருக்குக் கொரோனாத் தடுப்பூசி செலுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


நாட்டில் பதிவாகும் கொரோனா மரணங்களில் அதிகமானோர் 60 வயதுக்கு மேற்பட்டோர் என்பதால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

60 வயதிற்கு மேற்பட்டவர்கள் வைரஸ் பாதிப்புக்குப் பின்னர் வைத்தியசாலையில் சேர்க்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இறப்பு எண்ணிக்கையை குறைக்கும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது என அவர் தெரிவித்துள்ளார்.

# இஸ்லாம் வஹாபிசத்தை அடியோடு ஒழிக்க கட்சி பேதமின்றி ஒன்றிணைதல் வேண்டும்!

## அத்துரலியே ரத்ன தேரர் அறைகூவல்



கொழும்பு, மார்ச் 12

இலங்கையின் ஒட்டுமொத்த முஸ்லிம்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் மத அமைப்பான ஜம் - இயத்துல் உலமா சபை வஹாபிசத்தை அங்கீகரித்துள்ளதாகவும், இஸ்லாமிய வஹாபிசத்தை அடியோடு ஒழிக்க கட்சி பேதமின்றி ஒன்றிணைய வேண்டும் எனவும் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் சபையில் ஆவேசமாக தெரிவித்தார்.

அதேபோல் இலங்கையில் திட்டமிட்ட முஸ்லிம் மயமாக்கல் இடம்பெற்றுக் கொண்டுள்ளது. நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு முஸ்லிம் குடியேற்றங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இவற்றை உடனடியாக தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் ஆளும் கட்சி கொண்டுவந்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை விவாதத்தில் உரையாற்றிய போதே ரத்ன தேரர் அவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

சர்வதேச ஐ.எஸ் அமைப்பால் இலங்கையை முழுமையான இஸ்லாமிய இராச்சியமாக மாற்றுவதாக அவர்களின் அறிக்கைகளில் கூறப்பட்டுள்ளது. எனவே வஹாப் கொள்கையின் கீழ் பல்வேறு அமைப்புகள், நபர்கள் செயற்பட ஆரம்பித்துள்ளனர். இலங்கையின் சகல முஸ்லிம்களையும் பிரதிநித்துவப்படுத்தும் மத அமைப்பாக ஜம் இயதுள் உலமா சபை செயற்படுகின்றது. இந்த சபை வஹாப் கொள்கையை ஏற்றுக்கொண்டுள்ளது. அதுமட்டுமல்ல வஹாப் கொள்கை சகல இஸ்லாமிய புத்தகங்களில், பல்கலைக்கழகங்களில் கற்பிக்கப்படுவதாக ஜனாதிபதி ஆணைக் குழு வெளிப்படுத்தியுள்ளது. அதுமட்டுமல்ல மதரஸாக்களையும் அடிப்படைவாதத்தை கற்கும் ஒன்றாகவே உள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே சகல மாணவர்களும் பொதுவான கல்வி திட்டத்தின் கீழ் கற்பிக்கப்பட வேண்டும் என ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது. இதனையே நாம் விவாதிக்க வேண்டும். இந்த நாட்டில் மாற்றங்களை செய்தாக வேண்டும். சிங்கள, இந்து மக்களுக்கு காதி நீதிமன்றத்தால் இழைக்கப்படும் அநியாயங்களை கருத்தில் கொள்ள வேண்டும். அதை விடுத்து வெறுமனே சஹ்ரானுடன் தொடர்புபட்ட நபர்களை தூக்கில்போடுவதை பற்றி பேசி அர்த்தமில்லை. அதுவும் முக்கியமானதே, குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும் என கூறப்படுகின்றமை நியாயமானதே, ஆனால் அதனையும் தாண்டி சமூகத்தில் மாற்றங்களை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல பொதுபல சேனாவை தடை செய்வதில் எந்த நியாயமும் இல்லை. பொதுபல சேனா எந்தவொரு கலவரத்திலும், அடிப்படைவாத செயற்பாடுகளிலும் ஈடுபடவில்லை. ஆயுதம் ஏந்தவில்லை, தாக்குதல் நடத்தவில்லை. எனவே ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் இந்த விடயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த நாட்டின் முஸ்லிம் கல்விமான்கள் எனக் கூறப்படும் அமீன் உள்ளிட்ட பலர் இஸ்லாமிய அடிப்படைவாதிகளுடன் இணைந்து எடுத்துள்ள புகைப்படங்கள் அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது. ஜம் - இயத்துள் உலமா அமைப்பு முழுமையாக வஹாப் கொள்கைக்குள் மூழ்கியுள்ளது என அறிக்கையில் தெளிவாக கூறப்பட்டுள்ளது. எனவே ஜம் - இயத்துள் உலமா அமைப்பை அரசாங்கம் என்ன செய்யப்போகின்றது.

இந்த நாட்டில் வஹாப் வாதத்தை முழுமையாக அழித்தாக வேண்டும். சர்வதேச இஸ்லாமிய சட்டங்களை நிறுத்தவும், காதி நீதிமன்றத்தை முழுமையாக நீக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுவே எமது நிலைப்பாடு, இலங்கையில் முஸ்லிம் மயமாக்கல் இடம்பெற்றுகின்றது. இடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு முஸ்லிம் ஆக்கிரமிப்பு இடம்பெறுகின்றது. முஸ்லிம் அரசியல்வாதிகள் இடங்களை ஆக்கிரமித்து, பல்கலைக்கழகங்களை ஆரம்பிப்பதாக கூறி வெளிநாட்டு பணத்தை பெற்றுள்ளமை என சகலதும் இந்த அறிக்கையில் உள்ளது. எனவே ஐக்கிய தேசிய கட்சி, சுதந்திர கட்சி என பிரிந்து நிற்காது அனைவரும் ஒன்றிணைந்து முஸ்லிம் அடிப்படைவாதத்தை முழுமையாக துடைத்தெறிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் ஆவேசமாக பேசினார்.

## நல்லூர் உணவு ஒறுத்தல் போராட்டம் 12 ஆவது நாளாகவும் தொடந்தது!

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டுமென வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவரும் சுழற்சி முறையிலான உணவு ஒறுத்தல் போராட்டம் நேற்று (வியாழக்கிழமை) 12 ஆவது நாளாகவும் தொடர்ந்தது..

இலங்கையில் இடம்பெற்றனவாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ஊடாக இடம்பெற வேண்டும் எனவும் தமிழர்களுக்கான சுய நிர்ணய உரிமை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்னிலைப்படுத்தியும் இந்த உணவு ஒறுத்தல் போராட்டம் கடந்த 28 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

நல்லூர் - நல்லை ஆதீனம் முன்பாக யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களால் இந்த சுழற்சி முறையிலான தொடர் உணவு தவிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்த உணவுத் தவிர்ப்புப் போராட்டத்துக்கு காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள், தமிழ் அரசியல் கட்சிகள் உள்ளிட்ட பலரும் ஆதரவு வழங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிராந்திய கொன்சியூலர் அலுவலகம் திருகோணமலையில் நாளை அமைப்பு!

வெளிநாட்டு அமைச்சின் பிராந்திய கொன்சியூலர் அலுவலகம் திருகோணமலையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

அதன்படி வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பேஜ் உடன் இணைந்து வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தன 2021 நாளை பிற்பகல் 2 மணிக்கு திருகோணமலையில் உள்ள பிராந்திய கொன்சியூலர் அலுவலகத்தை சம்பிரதாயபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கவுள்ளார்.

இந்த கொன்சியூலர் அலுவலகத்தைத் திறந்து வைப்பதானது, கிழக்கு மாகாணம் மற்றும் அதன் அண்மித்த பகுதிகளில் உள்ள பொது மக்கள் கொழும்பில் உள்ள வெளிநாட்டு அமைச்சின் கொன்சியூலர் விவகாரப் பிரிவுக்குச் செல்லாமல் கொன்சியூலர் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு வழிவகுக்கும்.

பிராந்திய கொன்சியூலர் அலுவலகத்தை நிறுவுவதன் மூலம், வெளிநாடுகளில் பயன்படுத்துவதற்கான பிறப்பு, திருமணம், இறப்புச் சான்றிதழ்கள் மற்றும் கல்விச் சான்றிதழ்கள் ஆகியவற்றை சான்றுறுதிப்படுத்துதல், வெளிநாட்டில் சிக்கித் தவிக்கும் இலங்கையர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு உதவிகளை வழங்குதல், புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் குடும்பங்களின் நிவாரணம் மற்றும் இழப்பீட்டுக் கோரிக்கைகளை எளிதாக்குதல் மற்றும் வெளிநாட்டிலிருந்து இறந்த மனித உடல்களை திருப்பிக் கொண்டுவருதல் போன்ற பல கொன்சியூலர் சேவைகளை பொது மக்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

## பெரும்பான்மையைப் பாதுகாப்பதற்காக உண்மையை மூடி மறைக்க முடியாது!

### சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 12

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ள குறைபாடுகள் பரிசீலனை செய்யப்படும். அதனுடன் தொடர்புடைய குற்றவாளிகளை பாதுகாக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது. பெரும்பான்மையை பாதுகாத்துக் கொள்ள உண்மையை மூடி மறைக்க முடியாது என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

கம்பஹாவில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.03.2021 இல் வெளியிடப்பெற்றது.